Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 11 புதன்கிழமை (27.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 330

## 13இல் உள்ள குறைபாடுகள் பிரதமர் மோடிக்கு விளக்குவேன்

### என்கிறார் முதல்வர் விக்கி

13 ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகள் தொடர்பில், இந்தியப் பிரதமருக்கு எடுத்துச் சொல்வதற்கு தயாராக இருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரை சந்திப்பதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விருப்பம் வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினரிடம் அவர் நேரடியாகத் தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வடக்கு மாகாண முதலமைச்சரின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில் அவரிடம் கேட்ட போது, நான் அழைக்கப்பட்டால், நிச்சயமாக 13 ஆவது திருத்தத்திலுள்ள போதாமை (குறைகள்) தொடர்பில் இந்தியப் பிரதமரிடம் தெரிவிக்க தயாராக இருக்கின்றேன் என்று பதிலளித்துள்ளார்.

## நல்லூரில் வாகனத்தடையை மீறினார் வடக்கு முதல்வர்



### பக்தர்கள் முகம் சுழிப்பு

நீதி என்பது அனைவருக்குமே சமம் என்பதை பாடமாகவே கற்று செயற்பட்ட நீதியரசரான வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நல்லூருக்குள் தனது வாகனத்தில் உலா வந்து அங்கு நின்ற பக்தர்களை விசனப்படுத்தியுள்ளார்.

வாகனத் தடையையும் மீறி உள்ளே நுழைந்து இவ்வாறு செயற்பட்டுள்ளது அவரது முறையற்ற செயற்பாட்டைக் காட்டுவதாக அங்குநின்ற பக்தர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிகழ்வுகளுக்கு பங்கு பற்றி பிரபலப்படுத்தவா மக்கள் உங்களை முதலமைச்சர் பதவிக்கு தெரிவு செய்தார்கள்? எனவும் பக்தர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். ஒரு சில மீற்றர்கள் நடந்து வர அலுப்புப்படும் ஒருவர் எவ்வாறு மக்களை சந்தித்து பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றார் என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை இன்று அங்குரார்ப்பண விழா

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் புனரமைக்கப்பட்டு நவீன மயப் படுத்தப்பட்ட அச்சுவேலி கைத் தொழிற்பேட்டை இன்றையதினம் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியத்தூதுவர் வை.கே. சிங்ஹா ஆகியோரால் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

64 ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ள இந்த கைத்தொழில் பேட்டையின் மீள் நிர்மாணப்பணி

(19) ஆம் பக்கம் பார்க்க

## புல்மோட்டையில் காணி அளவீடு; மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்



திருகோணமலை, புல்மோட்டை, அரிசிமலைப் பகுதியில் 500 ஏக்கர் காணியை நேற்றையதினம் அளவீடுசெய்யும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்த மக்களுக்கும் பாதுகாப்பு கடமைக்காக வந்திருந்த பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையினால் அபூபக்கர் (வயது-54) என்பவர் காயமடைந்து புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நில அளவை திணைக்களத்தினால் பூஜாபூமி திட்டத்தின் கீழ் இந்த அளவை செய்யப் படவிருந்தது.

இந்த நடவடிக்கையை எதிர்த்து அரிசிமலைப் பகுதியில் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. பொலிஸ் பாதுகாப்புடன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தேசிய மொழிகள் அமைச்சினால் நல்லிணக்கம் ஏற்படவில்லை

### பொதுபலசேனா குற்றச்சாட்டு

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத்துறை அமைச்சு தோல்வி கண்டுள்ளதாக பொதுபலசேனா குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் பொதுபலசேனாவும் அகில இலங்கை இந்து சம்மேளனமும் இணைந்து இதனை நிறைவேற்றவுள்ளதாக பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை இந்து சம்மேளனமும் பொதுபலசேனாவும் இணைந்து நேற்று கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தின. இதன்போது கருத்து வெளியிட்ட கலகொட அத்தே ஞானசார தேரர்,

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிஉறுப்பினர்களின் வாழ்வாதாரம் மீளாய்வு செய்ய நடவழக்கை

புனர்வாழ்வளிக்கப்பட்டு, சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜகத் விஜேதிலக்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் பொருளாதார நிலை, சமூகமயம் மற்றும் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பில் இதனூடாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன்று இலங்கை வருகிறார் பாக். விமானப்படைத்தளபதி



(இஸ்லாமாபாத்)


இலங்கை விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் கே.ஏ.குணதிலகவின் அழைப்பின் பேரில் மூன்று நாள் பயணமாக இன்று இலங்கைக்கு வருகிறார் பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயாப்சீப் மார்ஷல் தஹீர் ரபீக்பட்.

இலங்கையில்

(19) ஆம் பக்கம் பார்க்க



# துணை மருத்துவ சேவை பாதிப்பு நோயாளர்கள் நேற்று அவதி



(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் அரசாங்க மருத்துவமனைகளில் கடமையாற்றும் துணை மருத்துவ சேவை அதிகாரிகள் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் துணை மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நோயாளிகளும் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்தாளர்கள், எக்ஸ்றே தொழில்நுட்ப சேவையாளர்கள், ஆய்வுகூட சேவையாளர்கள் தமது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கையாக புணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்தே யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் துணை மருத்துவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணம்மாகவே நேற்று யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் இணைமருத்துவ சேவையைப் பெற முடியாது அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

அவசர வைத்திய சேவையுடன் வைத்தியர்கள், நோயாளர்களைப் பார்வையிட்ட போதும் இணைமருத்துவ சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. இதனைத் தொடர்ந்து நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். பலர் தனியார் மருத்துவமனைகளை நாடினர். (பா,25)

# பிராந்திய அலுவலகம் சொந்தக் கட்டடத்தில்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட வடபிராந்தியத்திற்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் தனது அலுவலகத்தினை சொந்தக் கட்டடத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதியன்று திறப்பு விழா செய்து தொடர்ந்து அங்கே இயங்கவுள்ளது.

உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி ஞா.தேவஞானன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கணக்காய்வாளர் தலைமையதிபதி எச்.ஏ.எஸ்.சமரவீர பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைக்கவுள்ளார்.

# கைக்குண்டுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலடிப் பகுதியில் வாள் மற்றும் கைக்குண்டு வைத்திருந்த நபரை பருத்தித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்பாக பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்தே பொலிஸார் குறித்த நபரை அவரது வீட்டில் வைத்து கையும் மெய்யுமாக பிடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த நபரை பொலிஸார் விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## தீ விபத்தினால் வீடு முற்றாக அழிவு

(பளை)

புலோப்பளை கிழக்கில் இடம்பெற்ற தீ விபத்தில் வீடொன்று முற்றாக எரிந்து அழிந்துள்ளது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு சற்றுப் பின்னர் இடம்பெற்ற மேற்படி தீ விபத்திலேயே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

ம.ஞானமலர் என்பவருக்குச் சொந்தமான வீடே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

இதனால் இவரது குடும்பத்தினர் உடனடி உதவிகள் எதுவுமின்றி நிர்க்கதி நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். (37)

## சிகிச்சைகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை நிலையத்தில் உள்ள கதிரியக்க மூலத்தை மாற்றுவதற்கான பணிகள் இடம்பெறவுள்ளதால் நாளை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையான நான்கு நாட்களும் புற்றுநோயாளர்களுக்கான கதிர்வீச்சு சிகிச்சை இடம்பெற மாட்டாது என யாழ். மாவட்ட பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவராணி அறிவித்துள்ளார்.


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

***றீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)



**கேள்வி அறிவித்தல்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. பொறியியல் பீட உணவகம் - அறிவியல்நகர், கிளிநொச்சி
2. விவசாய பீட உணவகம் - அறிவியல்நகர், கிளிநொச்சி

மேற்படி இரு உணவகங்களை நடத்துவதற்குரிய பொறியிடப்பட்ட கேள்விகள் 2014.09.12 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள கணக்கு இலக்கம் 162-1001-60000-880 செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனி கேள்விப் படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். **கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளி வாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.**

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல்நகர் பிரதிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (C/3789) **26.08.2014**



# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1086 | திகதி 25.08.2014

வெற்றி எண்கள்: 10 20 43 59 | ஆங்கில எழுத்து: H

ஜக்பொட் பரிசு ரூ. 3,71,34,620/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,71,34,620/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 50,000/= | ரூ. 6,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 256 | 1,000/= | ரூ. 2,56,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 528 | 1,000/= | ரூ. 5,28,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11581 | 60/= | ரூ. 6,94,860/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6235 | 40/= | ரூ. 2,49,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 153033 | 20/= | ரூ. 30,60,660/= |
| ஆங்கில எழுத்து | 22040 | 20/= | ரூ. 4,40,800/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,79,720/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 37,434,020/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.08.27 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3763)



**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்**





மாதகல் கிழக்கு இராஜேஸ்வரி கடற்றொழிலாளர் அமைப்பினை எமக்கு உருவாக்கித் தந்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கட்கும் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலி. தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா தோழர்) அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது பணி மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

மாதகல் கிழக்கு இராஜேஸ்வரி
கிராமியகடற்றொழிலாளர் அமைப்பு,
மாதகல் கிழக்கு, கோணாவளை J/150.

(R/360)

# அரச முகாமைத்துவ உதவியாளர் பரீட்சையை யாழில் நடத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் 13/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு திறமை அடிப்படையில் நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2014 எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையினைத் தழுவி மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த தரம் I உத்தியோகத்தர்களுக்கும் இப் பரீட்சையானது 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வடமாகாணத்தில் கடமையாற்றும் மத்திய மற்றும் மாகாண சபையைச் சேர்ந்த குறித்த உத்தியோகத்தர்களுக்கான மேற்படி பரீட்சையானது கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

போர்க்கால சூழ்நிலைகளின் பின்னரும் 2010 ஆம் ஆண்டுக்கான மேற்படி பரீட்சையானது வடமாகாணத்தில் கடமைபுரியும் மத்திய மற்றும் மாகாண சபை பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அத்துடன் மத்திய மற்றும் மாகாண சபையைச் சேர்ந்த குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஒரே மாதிரியான வினாத்தாள்களே மேற்படி பதவியுயர்வுக்கு பரீட்சிக்கப்படுகின்றன.

எனவே மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள மத்திய மற்றும் மாகாண சேவையிலுள்ள வடமாகாணத்தில் கடமையாற்றும் குறித்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையையும், அவர்கள் இப்பரீட்சைக்கென கொழும்பு சென்று வருவதில் ஏற்படும் சிரமங்களையும் பண விரயங்களையும் கருத்திலெடுத்து இப்பரீட்சையினை வழக்கம் போல் வடமாகாண மத்திய மற்றும் மாகாண உத்தியோகத்தர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு உரிய ஒழுங்குகளை செய்து தருமாறு பரீட்சைக்கு தோற்றுவோர் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கால்நடைகளின் நடமாட்டத்தால் துன்பப்படும் பொது மக்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை, பாண்டியந்தாழ்வு பகுதிகளில் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப்பகுதிகளில் உள்ள கால்நடைகள் வீதிகளுக்கு குறுக்காக செல்வதால் வாகனங்களில் பயணங்களை மேற்கொள்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுவதாக பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இக்கால்நடைகளின் உரிமையாளர்கள் காலை வேளையிலேயே தமது கால் நடைகளை அவிழ்த்து விடுவதால் அவை வீதிகளில் திரிவதுடன் தமது உணவுக்காக கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பழங்கள், மரக்கறிகளை உண்பதால் கடை உரிமையாளர்கள் அசௌகரியங்களுக்குள்ளாவதுடன் நட்டத்தையும் பொறுப்பேற்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.


மேலும் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினால் குடிநீரிருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் இந்த சூழ்நிலையில் வீடுகளுக்குள் புகுந்து குடிநீருக்காக மக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கும் நீரை குடித்துவிட்டு மீதியை தட்டி ஊற்றிவிட்டுச் செல்வதுடன் அவற்றை அசுத்தப்படுத்துவதாகவும் இதனால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே கால்நடைகளை வளர்ப்போர் இது தொடர்பில் கவனமெடுத்து மக்களின் சிரமங்களை போக்க முன்வர வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (51)

# சைக்கிள் திருட்டு

யா.நகரில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துநிலையத்துக்கு பின்புறமாகவுள்ள வீதியில் நவீன சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக பூட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு குறித்த பயணி துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு கடைக்குச் சென்று பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது துவிச்சக்கரவண்டி திருட்டுப் போயிருப்பது தெரியவந்துள்ளது. கட்டைக்காட்டைச் சேர்ந்த அருளானந்தம் ஞானசீலன் என்பவரது லுமாலா வகை பெண்களுக்காக துவிச்சக்கர வண்டியே திருட்டுப் போயுள்ளதாகவும் அந்த வண்டியிலிருந்த குறித்த பயணியின் கைப்பை ஒன்றும் அதற்குள் இருந்த தேசிய அடையாள அட்டை, கல்விசார் ஆவணங்கள் மற்றும் காணி உறுதி என்பவையுமே திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (பா)



யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மாகாசங்க ஜே/84 கிராமிய அபிவிருத்தி செயலணி ஊடாக நாவந்துறை கலை வாணி முன்பள்ளி மாணவர்களுக்காக 81,000 ரூபா செலவில். மலசல கூடம் ஒன்று புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள தைக் காணலாம்.

# காலம் கலிகாலமாக மாறித்தான் போச்சுது

வடபுலத்தான் எழுதுவது...



போரால அழிஞ்சுபோன லச்சக்கணக்கான மரங்களை மீள் நடுகை செய்யிறதைப்பற்றி மாகாணசபையோ, மத்திய அரசோ முயற்சிப்பதாகத் தெரியவில்லை.

இதுக்கான திட்டங்கள் கூட தீட்டப்பட்டதா என்று அறிய முடியேல்ல.

அல்லது இதைப்பற்றி அண்ணனும் சரி, தம்பியும் சரி சிந்திச்ச மாதிரியும் இல்லை. போரால லச்சக்கணக்கான மரங்கள் அழிஞ்சது எண்டது பகிரங்கமான விசயம்.

மரங்கள் தேவை எண்டதும் எல்லாருக்கும் தெரிஞ்ச விசயமே.

மரங்கள் இல்லையெண்டால் மழையும் இல்லை, மனுசர் வாழக்கூடிய உகந்த சூழலும் இல்லை.

ஒரு காலம் எல்லா வீடுகளிலும் மா, தென்னை, பலா எண்டு எல்லா மரங்களும் நிண்டன.

நம் முன்னோர்கள் மரங்களை நடுவதை தங்கள் வாழ்க்கைச் செயற்பாடாக கொண்டிருந்தவை. அப்ப மர நடுகை இயக்கங்களோ, மரநடுகைத் திட்டங்களோ, மரநடுகை என்ற அரசியற் பரப்புரைகளோ, மர நடுகை என்ற நாடகமோ, நடிப்போ இருந்ததில்லை.

ஆனால் ஒழுங்காக மரங்கள் நடப்பட்டன. மண்ணும் செழித்தது. மனங்களும் செழித்தன.

இப்ப மரங்களை அழிச்சதும் போதாதென்று மரங்களை நடாமலும் விடுகிறார்கள்.

ஆனால் மரங்களில ஏதோ பெரிய பாசம் வந்தது போல மரநடுகையைப் பற்றியும், சூழல் பாதுகாப்புப் பற்றியும் கதைக்கிறார்கள்.

இதில விசேசம் என்னெண்டால் நவம்பர் மாதத்தில வாற 26ஆம், 27ஆம் திகதிகளில மட்டும் மரம் நட்டு மாகாணத்தில பெரும் புரட்சி செய்ய நினைக்கிற ஒரு ஆள் வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு பெரிய நாடகம் போடுகிற நடிப்புத்தான்.

இந்த ரண்டு நாளும்தான் இந்தச் சூழலியல்ாளருக்கு மரம் நடுகை பற்றிய கரிசனை.

பிறகு இதையெல்லாம் அவர் அடியோட மறந்திடுவார். உண்மையாக மரநடுகையில இவருக்கு கரிசனை இருக்குமெண்டால் அதை நடைமுறைக்கு கொண்டுவந்திருப்பார்.

குறைந்தபட்சம் தன்ர கந்தோர்லையாவது நாலு மரத்தை நட்டிருப்பார்.

ஆனால் அப்பிடி ஒரு அதிசயம் நடந்ததாக ஆரும் அறிஞ்சீங்களா?

சரி, இவரைத்தான் விடுவம்.

பனையை நடுகிற ஆக்களோ, தென்னையை நடுகிற ஆக்களோ இதுவரையில எத்தினை மரங்களை நட்டுச் சாதனை படைத்திருக்கினம்?

இந்த மரநடுகைகளுக்கெண்டு செலவழிக்கிற காசில பத்தில் ஒரு பங்கைக் கூட செலவழிக்காமல், மரநடுகையைப் பற்றி தம்பட்டம் அடிக்காமல் மரங்களால் ஊர்களை வளமாக்கியிருந்தவ நம் முன்னோர்.

காலம் கலிகாலமாக மாறித்தான் போச்சுது எண்டதில என்ன பிழை?

சோம்பல் எல்லா செயல்களையும் கடினமாக்கும், சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும். - பிராங்கிளின்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஊடகங்கள் பொறுப்புணர வேண்டும்!

தமிழ் ஊடகங்கள் தொடர்ந்தும் மக்களை திசைதிருப்பி வைத்திருப்பதிலேயே கவனமாக உள்ளன. அரசைத் தீவிரமாக எதிர்த்துக் கொண்டிருப்பதன் மூலம் மட்டுமே இங்கு தீர்வு ஏதோவகையில் வந்துவிடுமென மக்களைப் பொய்யாக நம்பவைத்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் வெற்றி என எந்த ஆதாரமுமில்லாமலே பொய்யான நம்பிக்கைகளை மக்களுக்கு வழங்குகின்றன. கூட்டமைப்பைச் சந்தித்த பிறகு, இந்தியப் பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது இதைத்தான்:

“இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பினரும் இணைந்து 13 வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வைக் காண வேண்டும்.”

மோடி அரசை இதைச் சொல்ல வைத்தது தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வெற்றி என்றால், அவர்கள் இனியும் மக்களை ஏமாற்றிக்கொண்டிராமல் அரசாங்கத்துடன் பேசித் தீர்வைக் காண முன்வரவேண்டும்.

அதற்கு அவர்களை வலியுறுத்துவதைத் தான், தொடர்ந்து பின்னடைந்து சென்றுகொண்டிருக்கும் எமது சமூகத்திலும் எமது மக்களது வாழ்விலும் அக்கறை கொண்டிருக்கக் கூடிய ஊடகங்கள் செய்ய வேண்டும்.

மக்களைத் தகவலறிவு உள்ளவர்களாக்குதல், கல்வியூட்டுதல், ஆட்சியும் அதிகாரப் பிரிவும் நீதியும் மக்களுக்குரியவையாகச் செயற்படுவதைக் கண்காணித்து வழிப்படுத்துதல், மக்களின் வாழ்வுக்குத் தீங்கானவற்றைக் கண்டு வெளிப்படுத்துதலும் சரியான திசை நோக்கிச் செல்ல வேண்டிய மக்களின் குரலாக ஒலித்தலும் ஊடகங்களின் கடமை.

நமது ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பதை அவற்றின் செய்திப் பொழிதல்களுக்கு அப்பால் நம் சிந்தனையைத் தப்புவித்து வைத்துக்கொண்டு கொஞ்சம் ஆய்ந்து பார்க்க வேண்டியது அவசியம்.

இன்றைய சூழலிலிருந்து நாம் மீண்டு மேலெழுவதற்குரிய சாத்தியமான மக்கள் நம்பக் கூடிய வழி ஏதும் இந்த ஊடகங்களால் இதுவரை எப்போதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?

உணர்ச்சிகரமாக விடயங்களை அணுகும் முறை தவிர, புத்திசாலித்தனமான, தமிழ் ராஜதந்திர நகர்வில் ஒரு சிறு வெற்றியையேனும் எப்போதாவது பெற்றுக்கொள்ளும்படியான ஆலோசனைகளை இவை சொல்லியிருந்ததுண்டா? ஊடகங்களின் பொறுப்புணர்ச்சியை எப்போதாவது காண்பித்ததுண்டா?

இன்றைய தமிழ் அபிப்பிராயத்தைப் பெருமளவு வடிவமைத்துக் கொண்டிருப்பவை இந்த செல்வாக்குமிக்க ஊடகங்கள்தான். எந்தக் கஷ்டங்களையும் கடந்துவிட முடியாதவாறு இன்னும் நம் சிந்தனை இருந்துகொண்டிருப்பதற்கு வேறு யார் முதற் காரணமாக முடியும்?

எல்லாவற்றையும் தீர்மானிக்க வல்ல உலக பயங்கரவாத சக்தியாக வருணிக்கப்படும் தகவல்தொழில்நுட்பப் புரட்சிக் காலகட்டத்திற்குள் இருக்கிறோம். இங்கே நமது ஊடகங்களோ ஒரே வகையான சரக்கை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

செய்திகள்,தகவல்கள் அனைத்தும் பொறுப்புணர்வற்ற, வெறும் உணர்ச்சியூட்டி விற்பனையாக்கும் சரக்குகளாகி விட்டன. இந்தச் சரக்கு உற்பத்தியின் நோக்கம், மாற்றங்களை ஏற்படுத்துவதல்ல, பண ரீதியாகவும் அரசியல் வாய்ப்பு ரீதியாகவும் தங்கள் இலாபத்தை அதிகரிப்பது மட்டுமே.

ஊடகம் உண்மையைச் சொல்லவில்லை என்றால், மக்களின் உண்மை வாழ்க்கையைச் சொல்லவில்லை என்றால் அதன் நெருக்குதல்களிலிருந்து மீள்வதற்கு வேண்டிய யதார்த்தத்தை காட்டவில்லை என்றால், அது வெறும் உணர்ச்சிகளை விற்பனை செய்யும் பொழுதுபோக்காக, நுகர்பொருளாகவே முடிந்துவிடும்.

ஊடகத்தின் உண்மையான மாண்பையும் மரபையும் மீட்கிற கனவு மக்கள் விழிப்புணர்வினால் மட்டுமே மெய்ப்படும்.

- ஆசிரியர்.

# ரணில் ஜனாதிபதியானால் நாட்டை துண்டாடி விடுவார்

## அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி கவலை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் நாட்டைத்துண்டாடி விடுவார் என அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கம்பளையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக வரைபடத்தில் ஒரு புள்ளியாகத் தோன்றும் எமது சிறிய நாட்டுக்கு எதிராக அமெரிக்கா செயற்பட, அவர்களின் புலி ஆதரவுப் போக்கே காரணம்.

இலங்கையைப் பிரித்து, தனி நாடொன்றை அமைத்துத் தருவதாக ஒபாமா புலிகளுக்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார். அதனை நிறைவேற்றும் நோக்கிலேயே இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து விசாரணை நடத்துகின்றனர். தற்போது இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூனும் ஒபாமாவுடன் சேர்ந்து கொண்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு கமரூன் தனிப்பட்ட முறையில் பல நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இவர்கள் இருவரும் இன்னொரு தடவை தேர்தலை சந்திக்கவுள்ளார்கள். அப்போது அந்நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று தங்கள் வெற்றியைத்தக்க வைத்துக் கொள்ளவே புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர்.

அதன் ஒரு அங்கமாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து அகற்றுவதற்கான சதி நடக்கிறது. அதற்கு நாம் உடந்தையாகி விடக் கூடாது." ரணில் இந்நாட்டின் ஜனாதிபதியானால் நாட்டைத் துண்டாடி விடுவார். புலிகளின் நோக்கத்தை இலகுவாக நிறைவேற்றிக் கொடுத்து விடுவார். அதற்கு நாம் இடமளிக்க் கூடாது என்றார்.

# வடமத்திய மாகாணத்தில் வடக்கு - தெற்கு நட்பு இல்லம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் கலாசார பகிர்வு மத்திய நிலையமொன்றை நிறுவ கலாசார மற்றும் கலை விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கலையினூடான இயல்பு வாழ்க்கை புத்தாக்கச் சிந்தனையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நிறுவவுள்ள இந்நிலையத்திற்கு ‘வடக்கு - தெற்கு நட்பு இல்லம்’ என பெயரிடப்பட்டுள்ளது.

மிகிந்தல பிரதேச சபையினால் வழங்கப்பட்ட நிலத்தில் இம்மத்திய நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்மொழிவுக்கமைய சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையில் கலாசார இணக்கப்பாட்டை அபிவிருத்தி செய்வதற்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்மத்திய நிலையத்தினூடாக மொழிகளை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. மேலும் கலாசார பகிர்வு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் சிங்கள, தமிழ் இளைஞர், யுவதிகள் மத்தியில் நல்லுறவை ... படுத்தல், இளைஞர்களுக்கிடையில் சமாதானம் நல்லிணக்க வாழ்வு என்பன தொடர்பில் அடிப்படையை ஏற்படுத்தல் சிறந்த சிந்தனையை மேம்மபடுத்தல் போன்றன இம்மத்திய நிலையத்தினை அமைப்பதன் நோக்கமாகும்.

கலாசார நல்லிணக்கத்தையும் ஒருங்கிணைப்பையும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் மேலதிகமாக 3 சிங்களப் புத்தகங்கள் தமிழ் மொழிக்கும் 3 தமிழ் புத்தகங்கள் சிங்கள மொழிக்கும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட 15 நூலகங்களுக்கு பகிர்ந்தளிக்க கலாசார மற்றும் கலை விவகார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# வாழ்வின் எழுச்சி திணைக்கள தொடக்கவிழா மன்னாரில்

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள தொடக்க விழா நேற்று மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

திவிநெகும திட்டத்தின் மன்னார் மாவட்ட மேலதிக பணிப்பாளர் நாயகமும்,மாவட்ட அரசாங்க அதிபருமான எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், அமைச்சர் றிசாட் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ் பாருக், முத்தலிப் பாபா பாருக், திவிநெகும திட்டத்தின் தலைமை மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆர்.எச்.ஏ.குமாரசிறி, வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியூதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமாக கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சமுர்த்தி அதிகாரசபை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமாக (திவிநெகும) மாற்றப்பட்டுள்ள நிலையில் . அதன தொடக்க விழாவும், உத்தியோகத்தர்கள், சமூக மட்டத் தலைவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் 258 பேர் மற்றும் பிரதேச செயலர்கள், கிராம மட்ட அமைப்புக்கள், சமூகமட்டத் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.குருபரன்தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு மீள்குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பின்னர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 5,600 வரையிலான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்தனர். இதன் பின்னர், மக்களுக்குத் தேவையான குடிநீர், மலசலகூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி உள்ளிட்ட சமூக தேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில், பிரதேச செயலகப் பிரிவில் 111 குழாய்க் கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன், 23 பழைய குழாய்க் கிணறுகள் திருத்தம் செய்யப்பட்டன.

மேலும், 27 பொதுக்கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டதுடன், 57 பொதுக் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டன. அத்துடன், மக்களின் தனிப்பட்ட நலன் கருதி 208 தனியார் கிணறுகளும் புனரமைப்புச் செய்யப்பட்டன.

அரச உதவியுடன் 45 மலசலகூடங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியில் 2681 மலசலகூடங்களும் என மொத்தம் 2,726 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. யுத்தத்தால் சேதமடைந்த பொதுநோக்கு மண்டபம் ஒன்று அரச சார்பற்ற நிதியின் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டதுடன், மேலும் ஒரு புதிய பொது நோக்கு மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், யுத்தத்தால் சேதமடைந்த 7 முன்பள்ளிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதுடன், மேலும் 8 முன்பள்ளிகள் புதிதாக அமைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (40)



# எமக்குத் தொழில் அழித்தொழிப்பது

**- பாஸ்டன் பாலா**

**2008** ஜனாதிபதித் தேர்தலில் நின்ற ஒபாமா நிறைய வாக்குறுதிகள் கொடுத்தார். அவற்றில் ஒன்றைச் செவ்வனே நிறைவேற்றி இருக்கிறார். பாகிஸ்தானிலும் இன்ன பிற தேசங்களிலும் பதுங்கியிருக்கும் அல் கைதா தீவிரவாதிகளை ட்ரோன் (Drone) கொண்டு குறி வைத்துத் தாக்கி அழிப்பேன் என்றார்.

“இளம் அமெரிக்க உயிர்களை இழக்கக்கூடிய ஆபத்து நிறைந்த காலாட்படையை அனுப்ப மாட்டேன். [illegible]மையான பொருட்செலவில் அதிவேக விமானங்களை அனுப்ப மாட்டேன். அதே சமயம் தீவிரவாதிகள், நம்மைத் தாக்கி அப்பாவி உயிர்களைக் கொல்வதையும் தடுப்பேன். அதற்கு ட்ரோன் உபயோகிப்பேன்.” என்றார்.

அதை எப்படித் தொழில்நுட்பம் கொண்டு நிறைவேற்றினார் என்பதைப் பார்ப்போம்.

அமெரிக்காவில் இருந்து கொண்டு இன்னொரு நாட்டில் பறக்கும் விமானத்தை இயக்கினால், அந்த விமானத்தை ட்ரோன் எனச் சொல்லலாம். துவக்க காலத்தில் பெரும்பாலும் வேவு பார்ப்பதற்கே ட்ரோன்கள் உதவின. கொஞ்ச நாள் கழித்து தொலைதூர கண்காணிப்புக்கும் ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பொழுது, குறி பார்த்துத் தாக்கவும் ட்ரோன்கள் செயல்படுகின்றன.

தீவிரவாதிகளின் வீட்டின் முகவரி தேடி, அவர்கள் இருக்கும் இருப்பிடத்திற்கு கலாட்படையோ கவச வாகனங்களோ செல்லும் காலத்திற்குள், தீவிரவாதிகள் வீட்டை மாற்றி விடுகிறார்கள். பிறகு, மீண்டும் அவர்களது வீட்டைத் தேடும் படலம் தொடங்க வேண்டும்.

இப்படி ஒளித்துப் பிடித்து விளையாடாமல், இருந்த இடத்திலிருந்து தொடர்ந்து கண்காணித்து, தக்க தருணத்தில் வேண்டிய நபரோ, நபர்களோ கிட்டியவுடன், ரிமோட் பொத்தானை அமிழ்த்தி, தொலைக்காட்சியை இயக்குவது போல், தொலைக்கட்டுப்பாட்டில் தீவிரவாதியைப் போட்டுத் தள்ள ட்ரோன்கள் இயங்குகின்றன.

உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டபிறகு இதன் உபயோகம் அதிகரித்தது. செய்திகளில் பரவலாக அடிபட்ட மட்டில் - யேமன், சொமாலியா, ஆ்ப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் ஆளில்லா விமானங்கள் மூலமாக தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க வான்படையில் 2,300 சொச்சம் விண்கலங்கள் இருக்கின்றன. படைவீரர் ஓட்டிச் செல்லும் விமானங்களில் இருக்கும் பல விஷயங்கள் ட்ரோன்களிலும் இருக்கின்றன. தானியங்கியாகப் பறக்கும் வசதி உண்டு; எந்த இடத்தில் இருக்கிறோம், எங்கு செல்ல வேண்டும் என்பதை அறியும் புவிநிலை காட்டி (GPS) உண்டு; கொடூரமான ஆயுதங்களும் உண்டு; ஆனால், விமான ஓட்டி மட்டும் கிடையாது. எனவே, இவற்றை “ஆளில்லா விமானங்கள்” (unmanned aerial vehicles) அல்லது “தொலை ஓட்டுநர் விமானங்கள்” (remotely piloted aircraft) என அழைக்கிறோம்.

வியட்நாம் போரின் போது மட்டும் ஆறாயிரத்து சொச்சம் விமானிகளை அமெரிக்கா இழந்தது. அது தவிர பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விமானங்களை இழந்தது. விமானங்கள் தரைக்கு அருகே பறப்பது முதல் காரணம். விமானிகளால் டக்கென்று தப்பித்து ஓடுவதற்கு, சரேல் திருப்பங்கள் செய்ய இயலாத விமானங்கள் இரண்டாம் காரணம். விமானியின் திறமைக்கேற்பவே விமானம் இயங்கும் அந்த சாமர்த்தியம் இல்லாத விமானிகள் மூன்றாம் காரணம். இந்தப் பிழைகளை ஆளில்லா விமானங்கள் போக்குகின்றன.

ஆளில்லா ட்ரோன்களில் உயிர்ச்சேதம் நடக்காது. அதாவது, தாக்குபவர், தாக்கப்படுவார் என்பதற்கு இடமே கிடையாது. தரைக்கு ஐந்து மைல் மேலே நின்று கொண்டிருக்கும் ட்ரோன்களை கண்டுகொள்வது கஷ்டம். அதே சமயம் ஒரே இடத்தில் ஸ்திரமாக இருபத்து நான்கு மணி நேரம் கூட நிற்கும் திறமை கொண்டது. மனிதரைப் போல் எட்டு மணி நேரம் தூங்க வேண்டும், காலைக்கடன் கழிக்க வேண்டும் போன்ற உடல் உபாதைகளும், பசியும் கிடையாது.

ஒரே வேலையையே, திரும்பத் திரும்பச் செய்யச் சொன்னால், “போரடிக்கிறது” என அலுத்துக் கொள்ளாமல் இயந்திரகதியில் மீண்டும் மீண்டும் துல்லியமாக கண்காணிக்கும்; கால் கடுக்க விழி இமைக்காமல் தன் பிடியில் சிக்கியவர் எங்கெல்லாம் செல்கிறாரோ, அங்கெல்லாம் பின் தொடர்ந்து அவரும் அறியாவண்ணம் காவல் காக்கும். விமானி இயக்கும் சண்டை ஜெட்கள் என்றால் இரண்டு மணி நேரத்திற்கு மேல் இயக்க இயலாது. போனோமா.. வந்தோமா என்று இருக்க வேண்டும்.

கடைசியாக, ட்ரோனிற்கு ஆகும் செலவும் மிகக்குறைவு. விமானியுள்ள போர்விமானத்தில் ஒரு கிலோமீட்டர் செல்வதற்கு ஆகும் செலவில், ட்ரோன் விமானங்கள் முன்னூறு கிலோமீட்டர் பறந்துவிடும். அவ்வளவு இலேசானது. காரைப் போல் எடை கொண்டது. போர் விமானம் சவர்க்காரக் கட்டி போல் கனக்கும் என்றால், ட்ரோன்களோ நுரை போல் பறக்கும்.

விமானியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இருக்கும் இராட்சத உபகரணங்களோ, பாதுகாப்பு அம்சங்களோ, துரத்துவோரிடமிருந்துத் தப்பித்துச்செல்ல அதிவேகமாக பறக்க வேண்டும் என்னும் நிர்ப்பந்தமோ இந்த உலோகப்பறவையிடம் இல்லை. எதிராளி தாக்க வந்தால் தற்கொலைப் படை - தன்னுடைய சயனைட் குப்பியை அருந்துவது போல், தன் னைத் தானே வெடித்துக் கொள்ளக் கூட முடியும்.

ஏன் இதெல்லாம் திடீரென்று முக்கியமாகிறது?

ஈராக்கில் இப்பொழுது அமெரிக்கப் படை இல்லை. ஆ்ப்கானிஸ்தானை விட்டும் கூடிய விரைவிலேயே அமெரிக்கா மூட்டை கட்டப் போகிறது. இன்றைய நிலையில் பாகிஸ்தானில் வசிக்கும் பயங்கரவாதிகளைத் தாக்க ஆ்ப்கானிஸ்தானில் இருந்து ட்ரோன்களை அனுப்புகிறார்கள். ஆனால், ஆ்ப்கானிஸ்தானில் இருந்து வெளியேறினாலும் இனி அமெரிக்காவில் இருந்தே ட்ரோன்களை அனுப்பலாம்.

மணிக்கு ஐநூறு மைல் வேகத்தில் ஐம்பதாயிரம் அடியில் பறக்கும் ட்ரோன்களைக் கொண்டு சொமாலியா அல் கைதாவும் பாகிஸ்தான் தாலிபான் தலைவர்களும் என்ன திட்டமிடுகிறார்கள் என்பதை அறியலாம். தேவைப்பட்டால், அவரின் தலை மட்டுமே சுக்கு நூறாக வெடிக்குமாறு ஆணையும் பிறப்பிக்கலாம்.

இப்போதைக்கு இந்த உளவாளி ட்ரோன்களை இயக்கும் பொறுப்பு முழுக்க முழுக்க சி.ஐ.ஏ. யிடம் (அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறை) இருக்கிறது. ஆனால், இப்பொழுதோ, உளவு என்பதைத் தாண்டி, தாக்குதலுக்கு ட்ரோன்களை பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். தாக்குதல் ராணுவத்தினர் வேலை. எனவே இதை இராணுவத்திற்கு மாற்றிக் கொடுக்குமாறு ஒபாமா விண்ணப்பித்திருக்கிறார்.

மூன்றடி நீளமே இருக்கிறது “ரேவன்” (Raven – அண்டங்காக்கை). இராணுவ வீரரின் தோள்பையில் அடக்கமாக உட்கார்ந்திருக்கும். எப்பொழுது தேவையோ, அப்பொழுது பையில் இருந்து வெளியில் எடுத்து, உறுப்புகளை நீட்டி, முழு உருவமும் கொடுத்து, பேப்பர் றொக்கெற் விடுவது போல், அம்பைப் போல் கையால் வீச வேண்டும். அதன் பிறகு, ஹெலிகொப்டர் பொம்மையை ரிமோட் மூலம் ஓட்டுவது போல், அதை எங்கு வேண்டுமானாலும் பறக்க வைக்கலாம். பாகிஸ்தான் இராணுவத்திடம் கூட நூற்றுக்கணக்கில் இந்த ரேவன் ட்ரோன்கள் இருக்கின்றன.

ஒசாமா பின் லேடனைப் பிடிக்க சி.ஐ.ஏ. செண்டினல் (sentinel) ட்ரோன் விமானத்தை உபயோகித்தது. ஆனால், அதே போன்ற பழைய மொடல் ட்ரோன்களை சீனாவிற்கும் ரஷ்யாவிற்கும் வேவு பார்க்கவோ, வெடி வெடிக்கவோ அனுப்பிவைத்தால் பாதி வழியிலேயே நசுக்கி விடுவார்கள்.

எனவே அதற்கு, எளிதில் கண்டு பிடிக்க முடியாத, அதி வேகம் கொண்ட, அடுத்த தலைமுறை கொலைகார ட்ரோன்களைத் தயாரிக்க வேண்டும். நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்து, தானியங்கியாக வெளிவந்து, சமயம் பார்த்து விண்ணில் பறந்து, அயல்நாட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அங்கேயே யார் கண்ணிற்கும் எந்த ரேடாருக்கும் தெரியாமல் பறக்கும் ட்ரோன்கள் தேவை.

இங்கிலாந்தில் இந்த மாதிரி புத்தம்புதிய ட்ரோன்களை டரானிஸ் (Taranis) என பறக்க விடுகிறார்கள். பிரான்சும் நியுரோன் (Neuron) தயாரித்திருக்கிறது. ஈரானும் சவுதி அரேபியாவும் வைத்திருக்கிறார்கள். அமெரிக்காவில் நான்கு நிறுவனங்கள் விதவிதமான பெயர்களில் கள்ளமாகத் தாக்கும் ட்ரோன்களைத் தயாரிக்கின்றன.

உங்கள் செல்பேசியில் இருக்கும் புகைப்படக் கருவிகள்தான் இங்கேயும் பயன்படுத்தப்படுகின்றன. செல்பேசியில், மிஞ்சி மிஞ்சிப் போனால் இரண்டு கமெராக்கள் இருக்கும். இந்த புதிய வகை ட்ரோன்களில் அது போல் ஐநூறு கமெராக்கள் அதன் உடலெங்கும் பதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால், அதன் கீழே நடக்கும் அனைத்து விஷயங்களையும் வெகு துல்லியமாக கண்காணிக்க இயலுகிறது.

அதே சமயம், பருந்துப் பார்வையாக, மொத்த விஷயங்களையும் பார்க்க முடிகிறது. அதாவது கூகுள் வரைபடத்தில், கொஞ்சம் கொஞ்சமாக ஆழமாக, மேன்மேலும் அருகே சென்று வரைபட உருவைப் பெரிதாக்கிக் கொண்டே போய், உங்கள் வீட்டினுள் நுழைவதைப் போல் ஐம்பதாயிரம் அடியில் இருந்து இந்த ட்ரோன்கள் உங்களை இருபத்து நான்கு மணி நேரமும் துல்லியமாக அவதானிக்கலாம். அப்படியே ஒட்டுக் கேட்கவும் செய்யலாம். எந்தப் புள்ளியையும் சென்று தாக்கலாம்.

**கொல்லுவதை மட்டும் மேன்மேலும் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் மறைந்து இருந்து கொல்லும் ராட்சத யுத்தம் மேன்மேலும் பெருகி வருகிறது. மறைந்து கொல்வதை விமானக் குண்டு வீச்சு, றொக்கெற் வீச்சு, நாடு தாண்டித் தாக்கும் ஏவுகணைகள் - இப்படிப் படிப்படியாக தூரத்திலிருந்தும், உயரத்திலிருந்தும் தாக்குவதை முனைந்து வளர்க்கிறார்கள். ஒரு காரணம், மிக அடிப்படையானது. மேற்கில் குழந்தைகள் பிறப்பது மிகவும் குறைந்து விட்டது. போருக்குப் போய்ச் சாக இளைஞர்கள் முன்னளவு தயாராக இல்லை, அத்தனை எண்ணிக்கையிலும் அவர்கள் இல்லை. முதியோர்கள் கூட்டம் பெருத்து வருகிறது. உலக வளங்களில் பெரும்பகுதியை இன்னமும் கபளீகரம் செய்து வாழும் மேற்குக்கு தம் வாழ்வின் வசதிகள் குறையக் கூடாது. பிற நிலப்பகுதிகளில் கிட்டும் கனிமங்களும் எரிபொருட்களும், தொழிலுற்பத்திப் பொருட்களும் தேவை. எனவே போர்களில் ஆட்களை இழக்காது ஆயுதங்களால் மட்டும் தாக்க மேன்மேலும் திட்டமிட்டுச் சாதிக்கிறார்கள். கொல்லப்படும் மனிதரை தொலைக்காட்சிகளில் வெகு நெருக்கமாகப் பார்த்தால், மிக்க மன உளைச்சல் ஏற்படுகிறதாம். அதற்காக, கொல்வதை விட்டுவிடுவார்களா என்றால், அதெப்படி முடியும்? அதனால் நேரில் பார்க்காமல் பல ஆயிரம் அடி உயரத்திலிருந்து கொல்வதை ஒரு பெரும் தொழில் நுட்பமாக வளர்க்கிறார்கள்.**



# நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ன கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை அரசாங்கத்தினால் மட்டும் மேற்கொள்ள முடியாது. எதிர்க் கட்சிகள் சிவில் சமூகம உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசிய மானது என பயங்கரவாத தடுப்பு தொடர்பான நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்பு ஒன்றில் அங்கம் வகித்த ஒருவர், தேசிய அரசியல் நீரோட்டத்தில் பங்கேற்க அனுமதிக்காத வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

இவ்வாறு சட்டம் இருந்திருந்தால் ஜே.வி.பி.யினால் அரசியலில் ஈடுபட்டிருக்க முடியாது. புலிகள் போன்ற பயங்கரவாத அமைப்புக்கள் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் நோக்கிலேயே 13ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது இந்தியா மாதிரியிலான தீர்வுத் திட்டங்கள் இலங்கைக்கு பொருத் தமாகாது. உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன் வைக்கப்பட வேண்டும்.

2009ஆம் ஆண்டு புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முனைப்புக்களில் இந்தியாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. இந்தியாவின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருக்காவிட்டால் இலங்கையில் யுத்தத்தை முடி வுக்குக்கொண்டு வந்திருக்க முடியாது என்பதே தமது நிலைப்பாடாகும்.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி, பிராந்திய வலய நாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயற்படுவார்

பாதுகாப்பு அரசியல் காரணிகளை விடவும் பொருளாதார விவகாரங்களுக்கு மோடி அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

# 3 பல்கலை மாணவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு

பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்க செயற்பாட்டாளர்கள் 3 பேரை எதிர் வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் தடுத்துவைக்குமாறு கண்டி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பேராதனை பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீடத்தை ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி கண்டி கலஹா சந்தியில் அண்மையில் தொடர்ச்சியான சத்தியாக கிரக போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

இது தொடர்பாக வாக்கு மூலம் பெறுவதற்காக 5 மாணவர்கள் பேராதனை பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப் பட்டிருந்தனர்.

அவர்களில் 3 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நகரசபையின் வளாகத்திற்குள் அத்துமீறி நுழைதல், உடமைகளுக்கு சேதம் விளைவித்தல், முறையற்ற வகையில் ஒன்று கூடுதல், பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும வகையில் கூடாரம் அமைத்தல் போன்ற குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

# உருளைக்கிழங்கு, வெங்காயம் இறக்குமதி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் மீதான விசேட வர்த்தக பொருட்களுக்கான வரி கடந்த 23 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப பட்டுள்ளது.

நிதியமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோவுக்கான வரி 15 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெரிய வெங்காயம் ஒரு கிலோவுக்கான வரி 25 ரூபாவிலிருந்து 35 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தை உள்நாட்டில் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கான உரிய விலையை நிர்ணயிக்கும் முகமாக இந்த விசேட வர்த்தக பொருட்கள் மீதான வரியை நிதியமைச்சு அதிகரித்துள்ளது.

# நிலாவெளி புறாத்தீவு குறித்த ஞாபகார்த்த முத்திரைகள்




நிலாவெளி புறாத்தீவு தொடர்பான ஆறு ஞாபகார்த்த முத்திரைகள் மற்றும் முதல்நாள் மேலுறைகளின் வெளியீட்டு வைபவம் தபால் மற்றும் தபால் சேவைகள் அமைச்சர் ஜுவன் குமாரதுங்க தலைமையில் நிலாவெளி கரையோரப்பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

பொருளாதார பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயும் இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டார்.

விசேட ஞாபகார்த்த முத்திரைகளாக வெளியிடப்பட்ட ஆறு ஞாபர்த்த முத்திரைகளும், உள்நாட்டு வெளி நாட்டு முத்திரை சேகரிப்பாளர்க... டையே பெரும் வரவேற்... பெறும் என தபால் திணைக்களம் நம்பிக்கை தெரிவிக்கின்றது.



ஆசியாவின் ஆச்சரியம் நோக்கிய அபிவிருத்தி செயற்றிட்டமாக கொழும்பு புறக்கோட்டை பஸ்ரியன் மாவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட மிதக்கும் வர்த்தக சந்தையின் ஒரு பகுதியின் காட்சியைக் காணலாம்.

# வாக்காளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கு விடுமுறை பெற்றுக்கொடுக்குமாறு தொழில் தருநர்களிடம் தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் வாக்களிக்க உரித்துடைய நபரொருவர் எழுத்து மூலம் கோரினால் சம்பளத்துடன் கூடிய விடுமு... வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு விடுமுறை வழங்கத் தவறினால் 500 ரூபாவுக்குக் குறையாக தண்டமோ ஒரு மாத காலத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனையோ வழங்க முடியும். அல்லது இரு தண்டனைகளையும் வழங்க முடியும் என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் தனியார், அரச துறை தொழில் தருநர்கள் தமது நிறுவன ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு கோரியுள்ளார்.

# தேர்தல் சட்டங்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை




(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

தேர்தல் விதி மீறல்கள் மற்றும தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த தற்போதைய சட்டங்கள் போதுமானதல்ல

தேர்தல் சட்டங்களில் காணபடும் குறைபாடுகளினால் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் நிர்க்கதியான நிலை காணப் படுகின்றது.

பொலிஸ் திணைக்களம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. 17ஆம் திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அரசியல் மயப்படுத்தப் பட்டுள்ளன.

அரசியல் தலை வர்களின் விருப்பு வெறுப் புக்களை பொலிஸார் நிறை வேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் சுயாதீனமான முறையில் இயங்காத காரணத்தினால் விதி மீறல்கள் மற்றும் வன்முறைகளைத் தடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக மேலும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

# பதுளையில் 40 ஆயிரம் பேருக்கு தேசிய அடையாள அட்டை இல்லை



பதுளையில் 40,000 பேருக்கு அடையாள அட்டைகள் இல்லை என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஊவா மாகாண சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு, பதுளை மாவட்டத்தில் இடம் பெறும் நடமாடும் சேவையில், இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் சரத் குமார தெரிவித்தார்.

விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகளை இந்த வாரத்திற்குள் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.பதுளை மாவட்டத்தில் 10 இடங்களில் அண்மையில் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இலவசமாக வழங்கப்படும் இந்தச் சேவையின ஊடாக உச்சப் பலனைப் பெற்றுக் கொள்ளுமாறு கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறினார.

வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில், கபே அமைப்பு, தேர்தல்கள் செயலகத்துடன் இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# காது அடையாளமிடாத மாடுகளை இறைச்சிக்கு வெட்ட தடைவிதிப்பு

## வைத்திய கலாநிதி திருமதி அமிர்தலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காது அடையாளம் இடப்படாத எந்த மாடுகளும் இறைச்சிக்காக வெட்டப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும் என யாழ். மாவட்ட கால்நடை சுகாதார திணைக்கள உதவிப்பணிப்பாளர் டாக்டர் திருமதி.வ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள் தொடர்பாக உதவிப் பணிப்பாளர் விடுத்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் கொல்களங்களில் வெட்டப்படும் மாடுகள் காதடையாளம் இடப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்த உள்ளூராட்சி மன்றங்கள் சுகாதார வைத்திய அதிகாரி திணைக்களத்துடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது மாடுகளுக்கான தொற்று நோய் பரவிவருவதனாலும், சட்டமுறைக்கு அமைவாகவும் காதடையாளம் இடப்படாத மாடுகள் வெட்டப்படுவதை தடுக்கும் முகமாக உள்ளூராட்சி சபைகளுடன் கால்நடை வைத்தியர்கள் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து சட்டத்திற்குள் நின்று செயற்படுமாறு உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (92)

# போசாக்கிற்கான செயற்றிட்டம் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மஹிந்த சிந்தனை தொலைநோக்கிற்கமைவாக ஜனாதிபதி தலைமையில் போசாக்கு சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய போசாக்குச் செயலகத்தின் அனுசரணையுடன் போசாக்கு நிறைந்த ஒரு தேசத்தினை உருவாக்குவதற்கான பன்முக செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்கு நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண ஆளுநர், வட மாகாண சபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், பிரதம செயலாளர், மாகாண செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண திணைக்கள தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களது பங்குபற்றலுடன் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தேசிய போசாக்கு செயலகத்தின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் லலித் சந்திரதாஸவும் அவரது அலுவலர்களும் பங்குபற்றவுள்ளனர்.


# காலபோக செய்கையை ஆரம்பித்த முல்லை.விவசாயிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியான வறட்சி நிலவிபோதிலும் தற்போது இப்பிரதேசங்களில் தொடர்ச்சியாக பருவப் பெயர்ச்சி மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. முன்னர் ஆழ்ந்த கவலையில் இருந்த விவசாயிகள் தற்பொழுது உற்சாகத்துடன் தங்கள் தொழில்களை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலிஓயா, கரைதுறைப்பற்று, பாண்டியன் குளம், துணுக்காய், ஆகிய பிரதேச செயலகர் பிரிவுகளில் தொடர்ச்சியாக வறட்சி நிலவிய போது, குடிநீர், விவசாய செய்கை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்த விவசாயிகள் தற்போது இப் பிரதேசங்களில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதினால் காலபோக செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

ஆழ்ந்த கவலையில் இருந்த விவசாயிகள் தற்போது மனத்திருப்தியுடன் தங்கள் தொழில்களில் ஈடுபடுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)



மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடை பெற்றது. அடியார்களின் அரோகரா கோஷத்துடன் பிள்ளையார் தேரில் வெளி வீதியுலாவருவதைக் காணலாம். (48)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

28.08.2014

நாளைய தினமுரசு வாரமலரில்...

- இந்தியாவின் எதிர்பார்ப்பும் கூட்டமைப்பின் குழப்பங்களும்
- ஈராக் மீதான வான் தாக்குதல் - ஓர் அலசல்-
- எங்கே போகிறது தமிழ் கலாசாரம்?
- கரிமலையூற்று கிராமத்தின் கண்ணீர்?

சிந்தனைகள் மாறட்டும்

உங்கள் முகவரிகளிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு






# பெண்கள் உலகக் கிண்ணக் கால்பந்து 3ஆவது முறையாக ஜேர்மனி சம்பியன்



(மான்ட்ரியல்)

பெண்களுக்கான உலக கிண்ண (20 வயது) கால்பந்து தொடரில், ஜேர்மனி அணி சம்பியன் பட்டம் வென்றது. பரபரப்பான இறுதிப் போட்டியில், நைஜீரியாவை தோற்கடித்தது.

கனடாவில் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பிபா உலக கிண்ணக் கால்பந்து தொடர் நடைபெற்றது. மான்ட்ரியல் நகரில் நடந்த இறுதிப் போட்டியில், ஜேர்மனி, நைஜீரியா அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் (90 நிமிடம்), இரு அணி வீராங்கனைகளும் ஒரு கோல் கூட அடிக்கவில்லை. இதனால் இரு அணியினருக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் எழுச்சி கண்ட ஜேர்மனி அணிக்கு 98ஆவது நிமிடத்தில் பீற்றர்மான், ஒரு கோல் அடித்தார். இதற்கு நைஜீரிய வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனையடுத்து ஜேர்மனி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. முன்னதாக 2004, 2010இல் கோப்பை வென்றது. இதுவரை 4 முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ஜேர்மனி அணி, 2012இல் அமெரிக்காவிடம் தோல்வியடைந்து, 2ஆவது இடம் பிடித்தது. இதன்மூலம் உலக கோப்பை (20 வயது) அரங்கில், அதிக முறை கிண்ணம் வென்ற அணிகள் வரிசையில், முதலிடத்தை அமெரிக்காவுடன் (2002, 2008, 2012) பகிர்ந்து கொண்டது.

நைஜீரிய அணி, இரண்டாவது முறையாக இறுதிப் போட்டி வரை முன்னேறியபோதிலும் இரண்டாவது இடம் பிடித்தது. முன்னதாக 2010இல் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற நைஜீரியா, ஜேர்மனியிடம் தோல்வியடைந்தது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில், பிரான்ஸ், வடகொரியா அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் ஆட்டநேர முடிவில், பிரான்ஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக மூன்றாவது இடம் பிடித்தது.

## வென்றது பார்சிலோனா



ஸ்பானிஷ் லீக் கால்பந்து போட்டியின் எல்சி அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் மெஸ்சி 2 கோல்கள் அடிக்க, பார்சிலோனா 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் பார்சிலோனா பயிற்சியாளர் லூயிஸ் என்ரிக் இந்தத் தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளார்.

ஸ்பெயினில் உள்ள கிளப் அணிகளுக்கு இடையே நடைபெறும் லா லிகா கால்பந்து போட்டியின் நடப்பு சீசன், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது. மட்ரிட் நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா, எல்சி அணிகள் மோதின.


உலகக் கிண்ணத் தொடரில் ஆர்ஜென்ரீனா அணிக்கு வெற்றி வாகையைப் பெற்றுக்கொடுக்கத் தவறிய மெஸ்சி, மீண்டும் பார்சிலோனா கிளப் அணிக்காக தனி முத்திரை பதித்தார். ஆட்டத்தின் 42 மற்றும் 63ஆவது நிமிடங்களில் அவர் இரண்டு கோல்கள் அடித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். குறிப்பாக எல்சி டிபண்டர்கள் ஐந்து பேருக்கு வித்தை காட்டி மெஸ்சி அடித்த இரண்டாவது கோல், இரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது.

பிரேசிலின் இளம் நம்பிக்கை நட்சத்திரமான நெய்மர் காயத்தில் இருந்து இன்னும் மீளவில்லை. அத்தோடு, உருகுவேயைச் சேர்ந்த கடி மன்னன் சௌரஸ், தடை காரணமாக, பார்சிலோனா அணியின் முதல் ஆட்டத்தில் பங்கேற்க முடியவில்லை.

முக்கியப் புள்ளிகள் இல்லாததால், களமிறங்கும் 11 பேர் கொண்ட அணியில் 18 வயதான முனிர் எல் ஹடாடிக்கு இடம் கிடைத்தது. சர்வதேச கால்பந்தில் ஜொலிக்க அரிதாகவே சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதை சரியாகப் புரிந்து கொண்ட முனிர், 2ஆவது பாதி ஆரம்பமாகி முதல் நிமிடத்திலேயே (46), அசத்தாலாக ஒரு கோல் அடித்து வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார்.

கடைசி வரை எல்சி அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை. இதனால், பார்சிலோனா அணி 3-0 என வெற்றி பெற்றது.

பார்சிலோனா அணியின் புதிய பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுள்ள லூயிஸ் என்ரிக், தனது முதல் ஆட்டத்திலேயே வெற்றி பெற்றுள்ளார். அவர் கூறுகையில், "இந்த சீசனை வெற்றியுடன் ஆரம்பித்தது மகிழ்ச்சி. எல்சியின் பின்களம் ஆரம்பத்தில் வலுவாக இருந்தது. நேரம் செல்லச் செல்ல நாங்கள் அதைத் தகர்த்தோம். சந்தேகமே இன்றி மெஸ்ஸி, உலகின் சிறந்த வீரர்" என்றார்.



# கண்ணாடியைப் பதம் பார்த்த ஜோன்சன் விளாசிய சிக்ஸர்

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் அடித்த சிக்ஸரால் வர்ணனையாளர்கள் அறையில் இருந்த கண்ணாடி உடைந்தது. அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

அவுஸ்ரேலியா, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டம், ஹராரேவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அவுஸ்ரேலிய அணி ஆடியபோது 49ஆவது ஓவரின் மூன்றாவது பந்தை ஜோன்சன் எதிர்கொண்டார். பன்யங்கரா வீசிய அந்த பந்தை, ஜோன்சன் சிக்ஸருக்கு விளாச, பந்து நேராக வர்ணனையாளர்கள் உட்கார்ந்திருந்த அறையை நோக்கி உயரச் சென்று, அங்கிருக்கும் கண்ணாடியை உடைத்தது.

வர்ணனை செய்து கொண்டிருந்த நீல் மான்த்ராப் மற்றும் பேங்க்வா ஆகியோர் அதிர்ச்சியுற்றனர். அதிரஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. உடைந்த கண்ணாடித் துகள்களை பேங்க்வா மேஜையிலிருந்து சிரித்துக் கொண்டே அப்புறப்படுத்தினார்.

இதேவேளை, நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவ்பே அணி முதலில் களத்தடுப்பைத் தீரமானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 350 ஓட்டங்களைப்பெற்றது. இதில், ஆரோன் பிஞ்ச், மிச்சல் மார்ஷ் மற்றும் கிலென் மைக்ஸ்வெல் ஆகியோர் அரைச் சதம் கடந்தனர். கிலென் மைக்ஸ்வெல் 46 பந்துகளில் 9 நான்கு ஓட்டங்கள் மற்றும் 5 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பதிலுக்கு 351 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி 39.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் மசகட்சா அதிகபட்சமாக 91 பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டரி, 1 சிக்சர் அடங்கலாக 70, சிக்கந்தர் ரஸா 33, முதும்பாமி 11, பிரெண்டன் டெய்லர் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரீபன் ஸ்மித் மூன்று, மிச்சல் ஸ்ரார்க், நதன் லயன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மார்ஷ் தெரிவு செய்யப்பட்டார்.

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ்

## ஷரபோவா, ஜோகோவிச் முன்னேற்றம்

(நியூயோர்க்)

நடப்பு ஆண்டின் கடைசி கிராண்ட்சிலாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில் மரியா ஷரபோவா, ஜோகோவிச் ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

2006ஆம் ஆண்டு சம்பியனும், உலகின் 5ஆம் நிலை வீராங்கனையுமான மரியா ஷரபோவா (ரஷ்யா) முதல் சுற்றில் சக நாட்டைச் சேர்ந்த கிரிலென்கோவை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 6-4, 6-0 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் 4ஆம் நிலை வீராங்கனை ரட்வன்ஸ்கா (போலந்து), 6ஆம் நிலை வீராங்கனை கெர்பர் (ஜேர்மனி), வோஸ்னியாக்கி (டென்மார்க்), சாரா இரானி (இத்தாலி), பெட்கோவிக் (ஜேர்மனி), ஜெலீனா ஜோன்கோவிக் (சேர்பியா), வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) ஆகியோர் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றைய பிரிவு முதல் சுற்றில் உலகின் முதல்நிலை வீரரும், 2011ஆம் ஆண்டு சம்பியனுமான ஜோகோவிக் (சேர்பியா) முதல் சுற்றில் ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த டியாகோவை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிக் 6-1, 6-2, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## ஏற்றுக்கொள்ள முடியாது

இந்திய அணியில் உள்ள இளம் வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவதால் தான் டெஸ்டில் சரியாக ஆடவில்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது ஒரு மலிவான குற்றச்சாட்டாகும். டெஸ்டில் சரியாக ஆடாததற்காக ஐ.பி.எல். போட்டியை குற்றம்சாட்டுவது தவறனாது என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார். இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்கள் குறித்து நான் அதிகம் கவலைப்படவில்லை. முரளி விஜய் முதல் டெஸ்டில் சதம் அடித்தார். லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது டெஸ்டில் சிறப்பாக ஆடினார். இதில் வெற்றி பெற்றதன் மூலம் அனைவரது கனவும் நனவாகி இருக்கும். முரளி விஜய் ஐ.பி.எல்.லில் விளையாடுவார். இதனால் ஐ.பி.எல். போட்டியை குறை கூற வேண்டாம். இந்திய வீரர்கள் வெளி நாடுகளில் உள்ளூர் போட்டிகளில் விளையாடி அனுபவம் பெற வேண்டும். புஜாரா இங்கிலாந்து கவுண்டியான டெர்பிசையரில் ஆடும் முடிவு வரவேற்கத்தக்கது. இதேபோல இந்திய பந்து வீச்சாளர்கள் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்காவில் எப்படி பந்துவீச வேண்டும் என்ற அனுபவத்தை பெற வேண்டும். ஒவ்வொருவருக்கும் இதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொடரை முழுமையாக வென்றது மே.தீவுகள்




பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி முழுமையாக கைப்பற்றிக்கொண்டது. மேற்கிந்தியத்தீவு களுக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. இப்போட்டித்தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் மேற்கிந்தியதீவுகளின் பொஸ்ரோவில் நடைபெற்றது.

முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ராம்டீன், டரன் பிராவோ ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மேற்கிந்தியதீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராம்டீன் 121 பந்துகளில் 169, டரன் பிராவோ 124 ஓட்டங்களைப் பெற்றனர். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த டரன் பிராவோ, ராம்டீன் ஜோடி 258 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இதன் மூலம் மூன்றாவது விக்கெட்டுக்காக பெற்ற அதிக ஓட்டம் என்ற உலக சாதனையை பிராவோ, ராம்டீன் ஜோடி பெற்றுக்கொண்டது. பந்துவீச்சில் அல் அமின் ஹொசைன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 339 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப்பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் முஸ்பிகீர் ரகீம் 72, தமிம் இக்பால் 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரவி ராம்போல் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை ரவி ராம்போல் பெற்றுக்கொண்டார்.

## இலங்கையின் முதல் மங்கை



(கொழும்பு)

சர்வதேச கால்பந்து பயிற்றுவிப்பாளர் அனுமதி பத்திர பயிற்சி நெறிக்காக முதற்தடவையாக இலங்கையில் ஒரு பெண் தெரிவாகியுள்ளார். ஊவா மாகாணம்- பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த டி.எஸ். மேனகா என்பவரே இச்சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார்.

பிரிட்டன் கால்பந்து சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறிக்கு டி.எஸ். மேனகா இங்கிலாந்து செல்லவுள்ளார்.

இவருக்கான அனைத்து செலவையும் பிரிட்டன் புனித ஜோர்ஜ் பார்க்-ஸ்டெபொர்ஷிர் என்ற முகவரியில் அமைந்துள்ள கால்பந்து சம்மேளனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆசிய கால்பந்து சம்மேளனம் முன்மொழிந்த பெண் பயிற்றுவிப்பாளர்களில் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண் என்ற பெருமையை பெற்றுள்ள டி.எஸ். மேன-கா 16 வயதுக்கு கீழ்பட்ட பெண்கள் அணிக்கு பயிற்றுவிப்பாளராக பணியாற்றியவர்.

தற்போது பெண்களுக்கான தேசிய கால்பந்து அணிக்கு உதவி பயிற்றுவிப்பாளராக பணியாற்றினார். ஏற்கனவே ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் சி பயிற்றுவிப்பாளர் அனுமதிப் பத்திரம் மற்றும் FIFA கோல் தடுப்பாளருக்கான அனுமதிபத்திரம் பெற்றவராவார்.

### அகில இலங்கை பாடசாலை மட்ட கிரிக்கெட்

# சென். ஜோண்ஸ், கொழும்பு றோயல் கல்லூரி அரையிறுதியில் இன்று பலப்பரீட்சை

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்திற்கு சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முன்னேறியுள்ளது. இன்றைய தினம் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரி பி அணியை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி எதிர்கொள்ளவுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான காலிறுதிப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோண்ஸ் ஜெனி பிளமிங்கின் பொறுப்டபான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனி பிளமிங் 74, கொரான் லக்கி 26, நிலோஜன் 23, ஜோசப் சரேன், நிரேசன் ஆகியோர் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திலீபன், சவ்ரி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 201 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பண்டாரவளை சென். தோமஸ் அணி நிரோஜனின் பந்து வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பண்டாரவளை சென். தோமஸ் அணி 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லங்குன், ஜெயவர்த்தன ஆகியோர் தலா 20, குணதிலக 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிலோஜன் 9.4 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, நிலோஜன் 9 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி கொழும்பு றோயல் கல்லூரி பி அணியை எதிர்கொள்ளவுள்ளது. இப்போட்டி கொழும்பு புளுபில் புற்றரை மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# இமையாணன் இளைஞர் கழக கால்பந்து இறுதியில் அண்ணாசிலையடி



(பருத்தித்துறை)

இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்துத் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு அண்ணாசிலையடி ஏ அணி முன்னேறியுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 18 வயதிற்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று கடந்த 25ஆம் திகதி இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் அண்ணாசிலையடி ஏ அணியும் இமையாணன் இளைஞர் கழக ஏ அணியும் மோதின. இப்போட்டியில் அண்ணாசிலையடி ஏ அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியதுடன் கோல் மழையும் பொழிந்தது. முற்பாதி ஆட்டத்தில் இரு கோல்களைப் போட்டுக் கொண்ட அண்ணாசிலையடி அணி பிற்பாதி ஆட்டத்தில் மூன்று கோல்களைப் போட்டுக் கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் இமையாணன் இளைஞர் அணி செயற்பட்டபோதிலும் இறுதி வரை கைகூடவில்லை. நிலையில் அண்ணாசிலையடி ஏ அணி 5-0 என்ற கோல் க்ணக்கில் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது. (12)

# சஞ்சீவ்குமார் சகலதுறையில் ஜொலிப்பு கிண்ணம் வென்றது வவுனியா நண்பர்கள்





(வவுனியா)

சஞ்சீவ்குமாரின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் இலங்கை கிரிக்கெட் சங்கம் நடாத்திய பிரிவு மூன்றின் முதல் சுற்று போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் வவுனியா நண்பர்கள் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை கிரிக்கெட் சங்கம் நடாத்தும் பிரிவு மூன்றின் மாவட்ட அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் வவுனியா மாவட்ட அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டத்தின் இறுதிப் போட்டி கடந்த 23ஆம் திகதி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் நண்பர்கள் அணியும் வடதாரகை அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நண்பர்கள் அணி சஞ்சீவ்குமாரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நண்பர்கள் அணி 44.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சீவ்குமார் 51, தினேஷ் 27, கெட்டி ஆராய்சி 21, ஜனகன் 18, ரஞ்சித் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஜயரூபன் மூன்று, விதுஷன் இரண்டு, யசீபன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 226 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வடதாரகை அணி சஞ்சீவ்குமாரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வடதாரகை அணி 32.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுஷன் 26, பிரகாஷ் 22, இளங்குமாரன் 20, யசோதரன் 19, அரவிந்தன் 17, குந்தன் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சீவ்குமார் 7.2 ஓவர்கள் பந்து வீசி 55 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, கெட்டி ஆராய்ச்சி இரண்டு, லிங்கேஸ்வரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இதன் மூலம் நண்பர்கள் அணி கிண்ணத்தை வென்றதுடன் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக சஞ்சீவ்குமார் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலாளர் உதயராசா வெற்றிக் கிண்ணத்தை வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டியின் மூலம் சிறந்த அணிகளை தெரிவு செய்வதே எங்கள் இலக்கு. நண்பர்கள், வடதாரகை அணிகள் வளர்ந்து வரும் சிறந்த அணிகள். இரு அணிகளுக்கும் என் வாழ்த்துகள் என பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா பிரதேச செயலாளர் உதயராசா தெரிவித்தார். (12)

# அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்

(கொக்குவில்)

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்துத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மாபெரும் கால்பந்துத் தொடர் பொற்பதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றது. இதில் ஊரெழு றோயல், திக்கம் இளைஞர், நாவாந்துறை சென். மேரிஸ், மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளன.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளதாகவும், முதலாவது அரையிறுதிப் போட்டியில் றோயல் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணியும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஞான்முருகன் அணியும் மோதவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# எல்.ரீ.ரீ.ஈ உடனான ராஜீவின் செயற்பாடுகள்

## 2

– முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் கே.நட்வர்சிங் புத்தகத்திலிருந்து

சிதம்பரமும் நானும் மேலும் சில விஜயங்களை கொழும்புக்கு மேற்கொண்டோம். டிசம்பர் 19ஆம் திகதிய தீர்மானங்களைப் பற்றி எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களிடம் சொல்வதற்கு சென்றபோது, சென்னையில் முதலமைச்சர் அலுவலகத்தில் வைத்து நாங்கள் பிரபாகரனையும் சந்தித்தோம். எங்களுக்கு அறிவிக்காமல் எம்ஜிஆர், எல்.ரீ.ரீ.ஈக்கு 40 மில்லியன் ரூபாக்களை பரிசாக கொடுத்தார். இது அனைத்து விதி முறைகளை யும் மீறி நடந்தது, ஆனால் இதில் ராஜீவ் காந்தி எதுவும் செய்ய இயலாதவராக இருந்தார்.

எம்ஜிஆரின் கண்ணோட்டம் தமிழ்நாட்டை சுற்றியதாகவே இருந்தது. இலங்கையின் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க பாகிஸ்தான், சவுதி அரேபியா, சீனா மற்றும் இஸ்ரேல் என்பன முயற்சி செய்து கொண்டிருந்தன. பொது நலவாய செயலாளர் நாயகம், சில பொதுநலவாய நாடுகள் இடைத்தரகு செய்து ஒரு தீர்வைக் காணலாம் என ஒரு யோசனையை முன்வைத்தார். இலங்கைப் பிரச்சினை சர்வதேச மயமாவதை நாங்கள் விரும்பாதபடியால், நாங்கள் அவரை அதைரியப்படுத்தினோம்.

மே 1987இல் ஒரு நெருக்கடி உதயமானது. அந்தச் சமயம் லலித் அத்துலத்முதலி யாழ்ப்பாணத்தை முற்றுகையிடுவதற்கான "லிபறேசன்" என்கிற இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான காலம் கனிந்து விட்டது எனக் கூறி ஜெயவர்தனாவை அதற்கு சம்மதிக்க வைத்துவிட்டார். யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டது மற்றும் நகரத்துக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவது கூட தடை செய்யப்பட்டது.

பிரச்சினையை மேலும் மோசமாக்கும் வகையில் மே 27இல் ஜெயவர்தனா, இந்த தடவை யுத்தம் எல்லாவற்றையும் முடித்து வைக்கும் யுத்தம் என அறிவிப்பு செய்தார். இந்த வெளிப்பாட்டால் குழப்பமடைந்தார் ராஜீவ் காந்தி, எங்களது அதிருப்தியை, எங்களது தூதுவர் மூலம் இலங்கைக்கு தெரிவிக்கப் பட்டது. மே, 28இல் இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்தியா தலையீடு



செய்யும் என பிரதமர் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்தார். இது அலட்சியப் படுத்தப்பட்டது.

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் நிலைமை மோசமடைந்தது, அத்தியாவசிய பொருட்கள் குறைவடையத் தொடங்கின. யாழ்ப்பாண குடாநாடு ஒரு மனித பேரவலத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்தது.

1987 ஜுன் 2இல், அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பெருட்களை கடல் வழியாக அனுப்புவது என்று ராஜீவ் முடிவு செய்தார். கப்பல் தொடரணி குறிப்பிட்ட திகதியில் யாழ்ப்பாணக் கடலுக்கு வந்து சேர்ந்தது. இலங்கைக் கடற்படை இந்திய படகுகளை நிறுத்தியதுடன் அவர்களை திரும்பிப் போகும்படி கட்டளையிட்டார்கள். கப்பல் தொடரணியின் தலைவரிடம் மோதலை தவிர்க்கும்படி நாங்கள் அறிவுறுத்தியிருந் தோம்.

பிரதம மந்திரி இந்த நடவடிக்கைக்கு தயவு காட்டவில்லை, கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள முடிவு செய்தார். இல.7, ரேஸ் கோர்ஸ் வீதியில் ஒரு கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. என்னையும் கலந்து கொள்ளும்படி கேட்கப் பட்டிருந்தது. நான் சில நிமிடங்கள் தாமதமாகவே வந்து சேர்ந்தேன், கூட்டம் ஏற்கனவே ஆரம்பமாகியிருந்தது.

சிரேஸ்ட அமைச்சரவை அமைச்சர்கள், பாதுகாப்புத் துறை தலைவர்கள், பிரதமரின் முதன்மைச் செயலாளர், அமைச்சரவை செயலாளர், ரோ அதிகாரிகள் மற்றும் வெளியுறவுத்துறை செயலர் ஆகியோர் அங்கு பிரசன்ன மாகியிருந்தனர். கிட்டத்தட்ட பத்து நிமிடங்கள் வரை கூட்ட நடப்பை அவதானித்த எனக்கு ஒரு வகை சங்கடம் தோன்ற ஆரம்பித்தது. அசாதாரணமான ஒரு விடயத்தைப் பற்றிய விவாதம் நடைபெறுவதை நான் புரிந்து கொண்டேன்.

எங்கள் மனதில் என்ன செயல்பாடு தோன்றியுள்ளது என நான் பிரதமரிடம் கேட்டேன். அவரது பதில் எனது அமைதியின்மையை மேலும் அதிகரித்தது - மனிதாபிமான உதவிகளை யாழ்ப்பாணத்தின் மீது வான்வழியாக போடுவதற்கு அவர் முடிவு செய்திருந்தார்.

இதைப்பற்றி நாங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டாமா என நான் வினாவினேன். ஒரு மந்திரிசபை அங்கத்தவர் கிட்டத்தட்ட என்னை ஏசும் தொனியில், "நட்வர்ஜி. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நாங்கள் ஏன் இலங்கைக்கு அறிவிக்க வேண்டும்?" எனக் கேட்டார்.

"ஏனென்றால் இலங்கை சுதந்திரமான இறையாண்மையுள்ள ஒரு நாடு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, கூட்டுச் சேரா நாடுகளின் அமைப்பு, மற்றும் பொதுநலவாயம் என்பனவற்றின் ஒரு அங்கத்துவ நாடு. மேலும் அது எங்களுக்கு அருகிலுள்ள நட்பான அண்டை நாடு. அது ஒரு பகைமை நாடு அல்ல. யாழ்ப்பாணத்தின் மீது மனிதாபிமான உதவிகளை போடுவதற்காக நாங்கள் விமானங்களை அனுப்பினால், நாங்கள் இலங்கையின் வான் வெளியை அத்துமீறல் செய்ததாக ஆகிவிடும்" என நான் பதிலளித்தேன்.

இந்த முடிவைப் பற்றி ஜநாவிலுள்ள எங்கள் நிரந்தரப் பிரதிநிதி சின்மயா - காரேகானுக்கு நாங்கள் அறிவித்தால் என்ன என்று நான் கேட்டேன். நாங்கள் இதைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் ஏனென்றால் பாதுகாப்புச் சபை கூடி இலங்கை விடயத்தை விவாதிக்கக் கூடாது என்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும் (இலங்கை அப்போது பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் பெற்றிருந்தது). பாதுகாப்புச் சபையிலுள்ள பெரும்பாலான அங்கத்தவர்கள் இலங்கை மீது அனுதாபம் காட்டுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை என்று நான் விளக்கினேன்.

அனுபவமும் நிபுணத்துவமும் கொண்ட சின்மயாவுடன் நான் பேச வேண்டும் என்பதற்கு பிரதம மந்திரி சம்மதித்தார். எங்கள் எண்ணத்தைப் பற்றி நான் சின்மயாவிடம் தெரிவித்தேன். அதைக்கேட்டு அவர் திகைத்துப் போனார். இதைப்பற்றி விவாதிப்பதற்கு பாதுகாப்புச் சபை கூட்டம் எதுவும் நடைபெறக் கூடாது என அவரிடம் நான் சொன்னேன். எந்தக் கூட்டமும் கூட்டப் பட மாட்டாது என அவர் பதிலளித்தார்.

(தொடரும்)

## நாம் ஒன்றும் மனிதர்களில்லை...!



அதிகாலை நேரத்தில், தனக்காகவும், தனது இரு குட்டிகளுக்காகவும் இரை தேடச் சென்றது தாய்ப்புலி.

இரு குட்டிப் புலிகளும் தாய்ப்புலி கொண்டு வரும் உணவை எதிர்பார்த்துக் காத்திருந்தன. நீண்ட நேரமாகியும் தாயைக் காணோமே? என்றது ஒரு புலிக்குட்டி.

இன்னும் இரை ஒன்றும் கிடைக்கவில்லையோ என்னமோ? என்றது இன்னொரு புலிக்குட்டி.

எனக்குப் பசி காதை அடைக்கிறது...

எனக்கும்தான் பசி வயிற்றைக் கிள்ளுகிறது!

எதற்கும் நாம் சிறிது தூரம் சென்று அம்மாவைத் தேடிப் பார்ப்போமா? என்றது ஒரு புலிக்குட்டி.

"வேண்டாம், வேண்டாம். நான் வரும்வரை நீங்கள் குகையைவிட்டு வெளியே வரக்கூடாது" என்று நம் தாய் சொல்லிவிட்டுப் போயிருக்கிறது என்றது மற்றொரு குட்டி.

கடைசிவரை அம்மா வராமலே இருந்து விட்டால்... நம் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? என்றது முதல் குட்டி.

பேசாமல் இரு! அப்படி வராவிட்டால் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்! என்று பதில் சொன்னது இரண்டாவது குட்டி.

"அதுவரை பசியோடு இங்கேயே கிடந்து தவிக்க வேண்டுமா?" என்று அலுத்துக் கொண்டே, தன் கால் விரல்களில் ஒன்றை லேசாகக் கடித்து, அதில் கசிந்து வந்த ரத்தத்தை நக்கி ருசி பார்த்தது.

அப்போது தாய்ப்புலி வரும் சத்தம் கேட்டது.

தாய்ப்புலி எந்த இரையையும் கொண்டுவரவில்லை. இதனால் குட்டிப் புலிகள் இரண்டும் ஏமாற்றம் அடைந்தன.

ஏன் அம்மா, ஒன்றும் கிடைக்கவில்லையா? என்று கேட்டது குட்டிப் புலிகளில் ஒன்று.

"ஒரு கொழுத்த காட்டுப் பன்றி மரத்தடியில் உதிர்ந்து கிடந்த பழங்களைப் பொறுக்கித் தின்று கொண்டிருந்தது. நான் அதன்மேல் பாயத் தயாராவதற்குள் இன்னொரு புலி வந்து அதைக் கவ்விக் கொண்டு போய்விட்டது." என்றது தாய்ப்புலி.

அதை நீ சும்மாவா விட்டாய்? என்றது இன்னொரு குட்டிப்புலி.

சும்மா விடாமல் என்ன செய்வது? என்று சொன்னது தாய்ப்புலி.

நீ அதை ஏன் அடித்துக் கொன்றிருக்கக் கூடாது? என்று கேட்டது முதல் குட்டிப்புலி.

சீச்சீ, தன் இனத்தைத் தானே அடித்துக் கொல்ல நாம் என்ன மனிதர்களா? நாம் மிருகங்கள் - அப்படியிருக்கும்போது நமக்கு நாமே எதிரிகளாக முடியுமா? அந்தப் பன்றி போனால் இன்னொரு பன்றி என்று சொல்லிக் கொண்டே... தாய்ப்புலி மீண்டும் இரை தேடச் சென்றது.

குட்டிப் புலிகள் இரண்டும் தங்கள் பசியை மறந்து, "நாம் மிருகங்கள் மனிதர்களை விட உயர்ந்த மிருகங்கள்" என்று சொல்லிக் கொண்டன.

## அஞ்சலி : ரிச்சர்ட் அட்டன்பரோ



மகாத்மா காந்தியை நம் கண்முன் நிறுத்திய ரிச்சர்ட் அட்டன்பரோ தன் 90ஆவது வயதில் காலமானார்,

அட்டன்பரோவின் இந்தக் காட்சி நான் பலமுறை பார்த்துப் பார்த்துக் கண்ணீர் சிந்தியது...

இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் கொன்று குவிக்கும் கொடுமையைக் கண்டித்து காந்தியின் உண்ணாவிரதம்... வன்முறையாளர்கள் வந்து ஆயுதங்களை அவர் காலடியில் சமர்ப்பித்துச் செல்கின்றனர்... ஆத்திரத்துடன் உள்ளே நுழையும் ஓம் பூரியைப் பார்த்து அனைவரும் திகைத்து நிற்கையில், அவர் ஒரு சப்பாத்தியைத் தூக்கி காந்தி மீது வீசுகிறார்.

"சாப்பிட்டுத் தொலை.. நான் நரகத்திற்குப் போகப் போகிறேன், உன்னைக் கொன்ற பாவமும் எனக்குச் சேரக் கூடாது..."

என்ன ஆச்சு உனக்கு எனக் காந்தி கேட்கும்போது அவர் தான் ஒரு முஸ்லிம் குழந்தையைக் கொன்றதைச் சொல்லி அழுகிறார்..

"அவர்கள் என் குழந்தையைக் கொன்றார்கள், அதனால் நான் ஒரு முஸ்லிம் குழந்தையை சுவற்றில் அடித்துக் கொன்றேன்...."

நீ நரகத்திற்குப் போகாது இருக்க ஒரு பிராயச்சித்தம் உண்டு என காந்தி அதைச் சொல்கிறார்.

அப்படியான ஒரு மீட்பைக் காந்தி மட்டுமே சொல்ல இயலும்.

வன்முறையில் அனாதையாகிப் போன ஒரு குழந்தையை எடுத்து வளர் என்கிறார்.


இது யாரும் சொல்வதுதானே என்பீர்கள்.

அடுத்து காந்தி சொல்வதைத்தான் காந்தி மட்டுந்தான் சொல்ல இயலும் என்றேன்.

"அந்தக் குழந்தையை உன் குழந்தையாக வளர். அந்தக் குழந்தையை ஒரு முஸ்லிமாக வளர்.."

அது ஒரு காலம். 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் தூக்கம் என்று வாழ்க்கைக்குரிய குறைந்தபட்ச அர்த்தத்துடன் வாழ்ந்து வந்தார்கள் நம் முன்னோர். எதையாவது துரத்திக்கொண்டு ஓடிக்கொண்டே இருக்கும் இன்றைய வாழ்க்கையில் தூக்கம் 6 மணி நேரம், வேலை 16 மணி நேரம் என்று மனிதர்கள் தலைகீழாக மாறிவிட்டார்கள்.

போதாக் குறைக்கு, 24 மணி நேரமும் ஓடுகிற தொலைக்காட்சி, போர்வைக்குள் புகுந்துகொண்ட பிறகும் கைப்பேசியில் முகநூல் மேய்ச்சல் என்று நம்மைத் தூங்கவிடாத விஷயங்கள்



# தூங்காத கண்கள்

**- டாக்டர் என்.ராமகிருஷ்ணன் -**

பெருகிவிட்டன.

எல்லாவற்றையும் விரல் நுனியில் செய்து முடித்து விட முடியும் என்கிற நிலை இருக்கிற போதும்கூட, நம்மில் பலருக்கும் முந்தைய நாள் தூக்கம் கண்களை அழுத்திக்கொண்டேதான் இருக்கிறது, இல்லையா?

இதற்கு என்ன காரணம்? தூக்கத்தை இழப்பதால் என்ன பெரிய பாதிப்பு வந்துவிடப் போகிறது?

"நமக்கு நாமே புத்துணர்வு ஏற்படுத்திக் கொள்வதற்குத் தூக்கம் மிகமிக அவசியமான ஒன்று" என்கிறார்கள் மருத்துவர்கள்.

வளர்ந்த மனிதர்கள் அனைவருக்கும் 6 முதல் 8 மணி நேரத் தூக்கம் அவசியம். மாதவிடாய்க் காலங்களில் பெண்களுக்குத் தூக்கத்தின் நேரம் கூடும். புதிதாகப் பிறந்த குழந்தைகள் 18 மணி நேரம் முதல் 20 மணி நேரம் தூங்குகின்றன. மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள் 10 மணி நேரம் தூங்குவார்கள். வளரிளம் பருவத்தினருக்கோ 8 மணி முதல் 9 மணி நேரத் தூக்கம் அவசியம்.

ஆனால், போட்டியை மையமாகக் கொண்ட கல்வியமைப்பு மற்றும் நண்பர்களின் அழுத்தம் போன்ற காரணங்களால் அவர்கள் சரியாகத் தூங்குவதில்லை.

இப்போதெல்லாம் தூக்கமின்மை பிரச்சினை சிறு வயதிலேயே தொடங்கிவிடுகிறது.

இவர்களைத் தவிர, தூக்கமின்மையால் அதிக அவதிக்குள்ளாகும் மற்றொரு பிரிவினர் முதுமையடைந்தவர்கள். பகலில் தூங்குவது, முறையான உடற்பயிற்சி இல்லாமல் இருப்பது போன்றவற்றால் இவர்களுடைய இரவுத் தூக்கம் பாதிக்கப்படுகிறது.

இதுபோன்ற பிரச்சினை உள்ள முதியவர்கள் சீக்கிரம் தூங்கி (இரவு 9 மணிக்குள்), சீக்கிரம் விழித்துக்கொள்வார்கள் (அதிகாலை 3 அல்லது 4 மணி). சிலருக்கு 6 மணி நேரத் தூக்கம் சரியாக வரும். இன்னும் சிலருக்கு 8 மணி நேரத்துக்கும் அதிகமாகத் தூக்கம் தேவைப்படும்.

முறையான தூக்கம் இல்லையென்றால் கவலை, மனஅழுத்தம், அதிகம் கோபப்படுதல், ஞாபக மறதி மற்றும் சக மனிதர்களுடனான தகவல் தொடர்புப் பரிமாற்றத்தில் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும்.

மொத்தத்தில் உங்களுடைய செயல்பாட்டு திறன் பாதிக்கப்படும். அத்துடன் உயர் ரத்தஅழுத்தம், நீரிழிவு, இதய நோய்கள் மற்றும் பக்கவாதம் போன்றவையும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

குறட்டை விடுவது, இரவில் அடிக்கடி சிறுநீர் கழிக்கச் செல்வது, காலை நேரத் தலைவலி, ஞாபகமறதி, கவனமின்மை, அதிகம் கோபப்படுதல், மனஅழுத்தம் மற்றும் அடிக்கடி மனநிலை மாறிக் கொண்டே இருப்பது போன்றவை சரியான தூக்கமின்மையின் அறிகுறிகள்.

தங்களுக்குக் குறட்டைவிடும் பழக்கம் இருக்கிறது என்பதை, கூச்சம் காரணமாகப் பலரும் மருத்துவர்களிடம் தெரிவிப்பதில்லை.

தூக்கமின்மையைப் போக்க

1. தினமும் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கச் சென்று, குறிப்பிட்ட நேரத்தில் விழித்துக்கொள்ளப் பழக வேண்டும்.
2. தூங்குவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பு இரவு உணவை உட்கொள்ள வேண்டும்.
3. காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்வது நல்ல தூக்கத்துக்குக் கைகொடுக்கும்.
4. ஒரு டம்ளர் பால் அல்லது ஒரு வாழைப்பழம் நல்ல தூக்கத்தைத் தரும்.
5. தூங்குவதற்கு முன்பு கடுமையான உடற்பயிற்சி மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

## சூரியகாந்தி மட்டுமல்ல...

சூரியனைப் பார்த்து நிற்பது சூரியகாந்தி மட்டும்தான் என நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் சங்ககாலப் பாடல்களோ சூரியகாந்தியுடன், நெருஞ்சிப்பூவும் சூரியனைப் பார்த்தபடிதான் இருக்கும் எனக் கூறுகிறது.

அகநானூறு (336) மற்றும் குறுந்தொகை (315) பாடல்கள் இதற்கான சான்றுகள். உதாரணமாக குறுந்தொகைப் பாடலில்,

"தோழி.. தலைவர் ஞாயிறு போன்றவர். என் தோள்களோ... அந்த ஞாயிற்றையே நோக்கி நிற்கும் நெருஞ்சி மலர்களைப் போன்றவை" என்கிறாள் ஒரு காதலி, தன் தோழியிடம்.

ஆக சூரியகாந்தி போன்றே நெருஞ்சிப்பூவும் சூரியனைப் பார்த்து நிற்பதுதான்.



# அறமெனப்படுவது யாதெனின்...

**- ஜெயமோகன் -**

அறம் என்பது இதுதான். ஒரு மனிதக்குழு தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள். இறுதியாக வகுத்துக் கொண்ட நடத்தைகள். செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை, செய்தே ஆகவேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித் தொகை. அதுவே அறம்.

நாம் நம் மொழிமரபில் அறம் என்ற சொல்லின் பிறப்புச்சூழலைப் பார்க்கையில் சங்க காலம் கண்ணுக்கு முன் விரிகிறது. புறநானூற்றுக் காலம் என்பது பெருங்குடி மன்னர்களான மூவேந்தர் சிறுகுடிமன்னர்களான வேளிர்களை, கடல்சேர்ப்பர்களை, குறவமன்னர்களை அழித்தொழித்துப் பேரரசுகளை உருவாக்கும் போர்ச்சூழல் என்பதுதான் வரலாறு. சங்கம் மருவியகாலத்தில் முடியுடை மூவேந்தர் மட்டுமே எஞ்சுகிறார்கள். அந்தப் போர்ச்சூழல் எல்லாவகை வன்முறையையும் அனுமதிக்கிறது.

எரிபரந்தெடுத்தல் என்று சங்க இலக்கியம் பேசும் போரழிவுகள் கொடூரமானவை. எதிரிநாட்டுப் பெண்கள் அறுத்தெறிந்த தாலிகள் சாலைகளில் மலையாகக் குவிகின்றன. புகை நகரை மூட பெண்களின் கண்ணீரில் யானைக்கால் வழுக்குகிறது. எதிரிநாட்டு ஊருணிகளை யானை வைத்து அழிக்கிறார்கள். வீடுகளை எரிக்கிறார்கள். எதிரி மன்னனின் பல்லைக் கொண்டுவந்து சுவரில் பதிக்கிறார்கள். எல்லாமே அறம்தான்.

இன்றைய நம் அறவுணர்ச்சி கூசுகிறது. ஆனால் அறம் என்பது மெல்லமெல்ல சமூகத்தால் விரிவாக்கம் செய்யப்பட்ட ஒரு கருத்து என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அறம் என்ற கருத்து ஒரு சிறு மக்கள் குழுவில் உருவாகிறது. அது அவர்களை மட்டுமே கட்டுப்படுத்துகிறது. ஒரு குடும்பத்துக்குள் உருவாகும்போது அது குடும்ப அறம். குடும்பம் குலமாக ஆகும்போது அது குல அறம். குலம் நாடாக ஆகும்போது அது அரசியல் அறம். நாடுகள் மானுடமாகும்போது மானுட அறம்.

போர்வெறியைக் கொண்டாடக் கூடிய, கொலையை கொள்ளையை அனுமதிக்கக் கூடிய, சங்ககாலத் தமிழ்ச்சமூகம் கொஞ்சம்கூட அனுமதிக்காத ஒன்றுண்டு. நன்னன் என்பவன் செய்த பெண்கொலை. ஒரே ஒரு பெண்ணைக் கொன்ற நன்னன் என்ற குறுநில மன்னனைப் புலவர்கள் மீண்டும் மீண்டும் சாபமிட்டுப் பாடியிருப்பதைக் காணலாம். தன் மக்களாலேயே நன்னன் ஒதுக்கப்பட்டான். "பெண்கொலை புரிந்த நன்னன்" என்றே வரலாற்றில் அறியப்பட்டான்.

அது மானுட அறம். என்னதான் இருந்தாலும் ஒருபோதும் செய்யக்கூடாத விஷயம் அது என தமிழ்ச்சமூகம் நினைத்தது. அவ்வாறு ஒரு சமூகம் நினைப்பவற்றின் அளவு பெருகப்பெருக அச்சமூகம் மானுட அறம்நோக்கி நகர்கிறது. கால-இட-சூழலை மீறிய அறத்தையே நாம் "அறம்" என்கிறோம். சங்கப்பாடல்களில் பொருண்மொழிக்காஞ்சியில் மானுட அறம் நோக்கிய தேடலை, விவாதத்தைக் காண்கிறோம். ஆனால் சங்கம் மருவிய காலகட்டத்தில் தமிழ்ச்சமூகம் அந்த அறத்தை வந்தடைந்திருப்பதைக் காணலாம். அரசியல் பிழைத்தோர்க்குக் கூற்றாக வரும் அறம் என்பது அதுவே.

அந்த அறம் ஒரு பலிவாங்கும் போர்க்கடவுளாக உருவாகி வந்திருப்பதைக் காணலாம். சிலப்பதிகாரக் காலகட்டத்தில் பெருமன்னர்கள் உருவாகிவிட்டிருந்தனர். அவர்கள் கட்டற்ற அதிகாரமுள்ளவர்கள். குறுங்குடிமன்னர்கள் குல அறத்தால், ஆசார மரியாதைகளால் கட்டுப்படுத்தப்பட்டவர்கள். ஆனால் பெருங்குடி மன்னனுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அவன் தவறுசெய்தால் தட்டிக்கேட்பது எது? அதுவே அறம். மானுட அறம். கூற்றாக அது வந்து வாசலில் நிற்கும் என்கிறார் இளங்கோ.

அதையே வள்ளுவர் "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்றார். அந்த அறம் நோக்கி நம் சமூகம் நகர்ந்ததை நாம் வள்ளுவர் வழியாகப் பார்க்கிறோம். அறன் வலியுறுத்தல் என்று வள்ளுவர் சொல்வது மானுட அறத்தையே. இல்லறம் துறவறம் என்னும் சிறிய அறங்களுக்கு அப்பால் கோபுர உச்சிபோல மானுட அறம் எழுகிறது.

அந்தத் தேடலின் உச்சியில் கம்பராமாயணம் நிகழ்ந்தது. அறத்தின் மூர்த்தியான் என கம்பன் ராமனைச் சொல்கிறான். ராமனின் குணம் அல்ல அறம். ராமன் அறத்தின் உடல்வடிவம். அறம் ராமனைவிட மேலானது. தருமம் பின் இரங்கி ஏக என்று சொல்லும்போது கம்பன் அதை ஒரு தனி இருப்பாக, தனி ஆளுமையாக உருவகிக்கிறான். அதுவே நம் மரபின் உச்சகட்ட அறத்தரிசனம்.

என் அலுவலகத்துக்கு முன்னால் உள்ள டீக்கடையில் அய்யப்பண்ணன் என்பவர் டீ குடிக்க வருவார். நூறு வயதை அண்டியவர். விவசாயி. அய்யப்பண்ணனுக்கு பொய்கையாறு அருகில் வயல் இருந்தது. அங்கே செல்ல பஸ்சால் இறங்கி எட்டு மைல் நடக்கவேண்டும்.

அய்யப்பண்ணன் கடையில் காலையுணவு சாப்பிடப்போகும்போது பஸ் வந்துவிட்டது. அடுத்த பஸ் மதியம்தான். ஆகவே பாய்ந்து ஏறிவிட்டார். கையில் தூக்குப் போணியில் பழைய சோறு இருக்கும் தைரியம். மதியம் வரை வெயிலில் வேலைசெய்துவிட்டு பசிவெறியுடன் சாப்பிட வரும்போது பார்த்தால் ஒரு நாடோடி அவரது போணிச்சோற்றை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். அருகே நின்ற கம்பைப் பிடுங்கிக்கொண்டு அய்யப்பண்ணன் ஓடி வந்தார்.


நாடோடிக்கும் பயங்கரமான பசி போல. அவன் போணியை வழித்து நக்கிக்கொண்டிருந்தான். பசியாறிய முகத்துடன் ஏறிட்டுப்பார்த்தான். "எப்பிடி நான் அவன அடிப்பேன்"பசியாறின முகத்தில உள்ளது மகாலச்சுமியில்லா?" என்றார் அய்யப்பண்ணன் என்னிடம். அய்யப்பண்ணனின் அந்த மனவிரிவே மானுட அறம்.

நண்பர்களே, மானுட வரலாறென்பது அறத்தின் பரிணாம வளர்ச்சிதான்.





பொருளாதார அபிவிருத்தி
அமைச்சர் பசில் ராஜபக்ச



அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா



பிரதி அமைச்சர்
வீரகுமார திசாநாயக்க



அமைச்சின் செயலாளர்
வே. சிவஞானசோதி

# அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டை

## இன்று அங்குரார்ப்பண விழா

மகிந்த சிந்தனை தேசிய அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டையானது வடமாகாணத்தினை குறிப்பாக யாழ்.மாவட்டத்தினை கைத்தொழில் மையமாக மாற்றுவதற்கு வசதிப்படுத்தும் ஒரு பாரிய முன்னெடுப்பாக கருதப்படுவதோடு அதிகளவு வாய்ப்பானதும் சாத்தியமானதுமான கைத்தொழில் துறைகளை சிறப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடாகவும் நோக்கப்படுகின்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ், புனரமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தப்பட்ட யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டையானது இன்று புதன்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக் சவினாலும் இந்திய உயர்ஸ்தானிகர் அதிமேதகு வை.கே.சிங்ஹாவினாலும் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்நிகழ்விற்கு தலைமை தாங்குவார். பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி ஆகியோர் இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**இந்திய அரசின் நன்கொடை உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் மையம்.**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையினை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் இந்திய அரசின் சிறிய நன்கொடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 225 மில்லியன் நிதியுதவியுடனும் இலங்கை அரசின் ரூபா 50 மில்லியன் நிதியுதவியுடனும் ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்டத்தினை முகாமை செய்வதற்கும் தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்குவதற்கும் ஐக்கிய நாடுகள் செயற்றிட்ட சேவைகள் அலுவலகம் (UNOPS) நியமிக்கப்பட்டதோடு, இந்திய அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் செயற்றிட்ட சேவைகள் அலுவலகத்திற்கும் (UNOPS) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவினதும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் இந்திய உயர்ஸ்தானிகரதும் முன்னிலையில் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

**பிராந்திய சமமின்மையைக் குறைப்பதற்கான மகிந்த சிந்தனை தொலைநோக்கு**

கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையில் கைத்தொழில்மயமாக்கலில் காணப்படும் சமமற்ற போக்குகளைக் குறைப்பதற்கான ஒரு துறைசார் உபாயமாகவும், பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள கைத்தொழில்களை ஊக்குவிக்கும் உபாயமாகவும் கைத்தொழில் பேட்டைகள் நிறுவப்படுவதை மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு செயற்றிறனான உபாயமாக இனங்கண்டுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

**முதற்கட்டமாக 65 ஏக்கர் நிலப்பரப்பில் 25 ஏக்கர் காணிகள் 22 கைத்தொழில் அலகுகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.**

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை 1970 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு கைத்தொழில் அபிவிருத்திச்சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அங்கு 25 ஏக்கர் பரப்பில் பல்வேறுபட்ட கைத்தொழில் துறைகள் சுண்ணாம்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், உணவு மற்றும் மென்பான உற்பத்திகள், அலுமினியப் பொருள் உற்பத்திகள், ரயர்களை மீள உருவாக்குதல், தேங்காய் எண்ணெய் வார்த்தல், எவர்சில்வர் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திகள் உள்ளிட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் 36 கைத்தொழில் அலகுகளை உள்ளடக்கியிருந்தது. 1971 ஆம் ஆண்டு இதன் தொழிற்பாடுகளை தொடங்கி பிரபல்யமாக தொழிற்பட்டு வந்த கைத்தொழில் பேட்டையின் தொழிற்பாடுகள் கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக 1991ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். 25 வருட காலங்களாக இக்கைத்தொழில் பேட்டை கைவிடப்பட்டிருந்த தோடு 2011 ஆம் ஆண்டு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் போது இது காடாக காட்சியளித்தமை கவலைக்குரிய விடயமாகும். ஆரம்பத்திலிருந்து சகல வேலைகளும் புதிதாக மீள ஆரம்பிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்து. நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன் அமைச்சானது பாதுகாப்பு படையினரின் உதவியுடன் கண்ணிவெடிகளை முற்றாக அகற்றும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள செயற்படுத்துவதற்கும் நவீனமயப்படுத்துவற்கும் அமைச்சினால் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்பொழுது இக் கைத்தொழில் பேட்டையானது சூழல் நட்புறவான ஒரு மாதிரிக்கைத்தொழில் பேட்டையாக உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பாரிய, நடுத்தர மற்றும் மென் ரக கைத்தொழில்களிற்கான வலையங்கள் அடையாளங்கண்டு சூழல் நட்புறவை ஏற்படுத்த கூடிய வகையில் பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**முதலீட்டாளர் தெரிவு**

சிறந்த சர்வதேச நடைமுறைகள் மற்றும் வெற்றிக் கதைகளின் அடிப்படையில் அமைச்சானது கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து அதிக வாய்ப்பான, திறமையுள்ள அர்ப்பணிப்புடன் தொழிலாற்றக் கூடிய கைத்தொழில் முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கான பிரமாணங்களை (Criteria) தயாரித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். அமைச்சானது நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்தல் (Picking the Winners) என்ற கொள்கையை கடைப்பிடித்து திறமையுள்ள அதிக வாய்ப்பான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை தெரிவுசெய்து வருகின்றது. பின்வரும் அளவுகோல்கள் பயன்படுத்தப்படுகின்றன :

- அதிக வாய்ப்பானதும் சாத்தியமானதுமான துறைகள்
- பெறுமதிச் சேர்க்கை
- உள்நாட்டு மூலப் பொருட்களின் பயன்பாடு
- ஏற்றுமதி நோக்கம் / ஏற்றுமதி தொடர்புடைமை
- முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய இணைப்புக்கள்
- பல்வகை விளைவுகளைக் கொண்ட சிறந்த துறைகள்
- முதலீடு மற்றும் தொழில்வாய்ப்பு உருவாக்கம்

**அதிக வாய்ப்பானதும் சாத்தியமானதுமான சிறிய் மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்**

ஆரம்பத்தில் 61 கைத்தொழில் முயற்சியாளர்கள் கைத்தொழில் பேட்டையில் முதலிடுவதற்கு தங்கள் விருப்பங்களைத் தெரிவித்திருந்தனர். விரிவான கருத்திட்ட முன்மொழிவுக[illegible] 17 கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கருத்திட்டங்களில் உணவு பதனிடுதல் மற்றும் பொதியிடுதல் பழங்கள் மற்றும் காய்கறிகள் பதனிடல், வெதுப்பக உற்பத்தி பொருட்கள், தேங்காய் எண்ணெய், இரசாயன உற்பத்திகள், சுண்ணாம்பு உற்பத்திகள், சீமெந்து உற்பத்திகள் பைபர் கண்ணாடி, இறப்பர் உற்பத்திகள் ரயர் மீளுருவாக்கம் பலகை செதுக்கல், சிற்ப வேலைகள், தும்பு, பிளாஸ்டிக் பொருட்கள், மென்ரக பொறியியல் உற்பத்திகள், கனிம நீர், அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகர ணங்கள், துருப்பிடிக்காத உருக்கு மற் றும் அலுமினியம் ஆகிய துறைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிக வாய்ப்பான சாத்தியமான திறமையுள்ள முதலீட்டாளர்களின் தெரிவு நடைபெற்று வருகின்றது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி முன்னெடுப்பானது வடமாகாணத்தினை குறிப்பாக யாழ்.மாவட்டத்தினை ஒரு கைத்தொழில் மையமாக மாற்றி அதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய இணைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் வடமாகாணத்தில் துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்த கூடியதாக அமையுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு.வே. சிவஞானசோதி தெரிவித்தார்.




**வே.சிவஞானசோதி**

**செயலாளர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

# எரிபொருள் தட்டுப்பாட்டால் விவசாய செய்கைகள் பாதிப்பு

## – நெடுங்கேணி மக்கள் கவலை –



(நெடுங்கேணி)

நெடுங்கோணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் பெற்றோலுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் இப் பிரதேச மக்கள் தங்கள் விவசாய செயல்களை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள் ளனர்.

நெடுங்கேணி எரிபொருள் நிலையத்தில் டீசல் கடந்த யூன் மாதத்திலிருந்து இல்லை. அதுமட்டுமன்றி கடந்த 7ம் மாதத்திலுருந்து பெற்றோல் முடிவடைந்த நிலையில் பெற்றோல் கூட்டுத்தாபன உரிமையாளரினால் நிலையத்துக்கான எரிபொருளினை பூர்த்தி செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி விவசாயிகள் தங்கள் எரிபொருள் தேவையினை பூர்த்தி செய்ய ஒட்டிசுட்டான் புளியங்குளம் முள்ளியவளை போன்ற பரதேசங்களிலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு சென்று தங்கள் எரிபொருட்களை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு எரிபொருள் நிலையம் திறந்து வைக்கப்பட்டு ஒரு சில வாரத்துக்குள் நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களினால் பெற்றோல் நில உரிமையாளரின் எரிபொருள் நிலையங்களின மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் இவ் வர்த்தக எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் விற்பனை முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேச மக்கள் வெளிப் பிரதேசங்களுக்குச் சென்று தங்கள் எரிபொருள் தேவையினை பூாத்தி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இப் பிரச்சினையை விரைவாக பூர்த்தி செய்யுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (40)

## காலாவதியான உணவுப் பொருட்கள் வலி.தென்மேற்கில் விற்பனை

(வரணி)

வலி.தென் மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதி கடைகள் சிலவற்றில் பாவணைக்கு உதவாத காலாவதித் திகதி முடிவுற்ற பொதி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் அவற்றை கொள்வனவு செய்யும் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதி செய்யப்பட்ட உணவுப பொருட்களை கொள்வனவு செய்ய கடைகளுக்குச் செல்லும சிறுவர்கள் பொருட்களைப் பெற்றுக் கொண்டதும் அதனை உண்ண ஆரம்பித்து விடுவார்கள் எனவே காலாவதியான உணவுப பொருட்களை விற்பனை செய்வோர் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிக கவனம் செலுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (66)

# மரத்தில் தொங்கியது சடலம் மர்மம் துலக்க விசாரணை

தலைமன்னார் வீதியில் எழுத்தூர் சந்திக்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சடலமாக மீட்கப்பட டுள்ளார்.

சட்லமாக மீடகப்பட்டவர் மன்னார் செல்வநகர் பகுதியைச் சேர்ந்த ஒரு. குழந்தையின் தந்தையான தர்மசீலன் கரிகரன் (வயது 31) என்று அவரின் உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். இவர் மன்னார் இலங்கை போக்குவரத்து சபையின பஸ் சாரதியென்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அருகிலுள்ள தனது உறவினரின் வீட்டில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்டுவிட்டு நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் தனது வீட்டுக்கு திரும்பிய அவர் மனைவியுடன் தகராறில் ஈடுபட்டார் என்றும் அதன் பின்னர் வீட்டிலிருந்து அதிகாலை 4 மணியளவில் தனது பணியிடத்துக்குப் புறப்பட்டார் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அந்த வழியாகச் சென்றவர்கள் சடலத்தை கண்டு, அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தகவல் கொடுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து மன்னார் பதில் நீதிவான் எம்.சதக்கத்துல்லா சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டதுடன் சடலத்தை மீட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார். தூக்கிட்ட மரக்கிளை மிகவும் சிறியது· அது மனித உடலைத் தாங்கக்கூடிய பருமனைக் கொண் டிருக்கவில்லை என்றும், சடலத்தின் முழங்கால் நிலத்தில் முட்டியவாறே காணப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவிக் கின்றனர்.


இந்த நிலையில் குறித்த நபரை யாரும் அடித்து கொலை செய்து பின்னர் தூக் கிட்டுள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேசிய வீரன் பண்டார வன்னியனின் நினைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற போது ஏ9 வீதி ஊடாக வவுனியா நகரசபை நோக்கி பாரம்பரிய ஊர்வல நிகழ்வு இடம்பெறுவதைக் காணலாம். (70)

# ஆயுர் வேதம்

## புண்ணை ஆற்றக் கூடிய சிகிச்சைகள்



உடலில் புண் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்து அந்தப் புண்ணானது ஆறி மறுபடியும் அதே இடத்தில் புண் ஏற்படும் நபர்கள் எந்தக் காரணம் கொண்டும் பகலில் படுத்து உறங்கக் கூடாது என்று ஸூஸ்ருதர் எனும் ஆயுர்வேத முனிவர் குறிப்பிடுகிறார்.

பகலில் படுத்து உறங்குவதால் உடலில் கனம் கூடுகிறது. மேலும், அரிப்பு, வீக்கம், வலி, சிவப்பு நிறம் மற்றும் புண்ணிலிருந்து துர்நீர் வெளியாகும் என்றும் குறிப்பிடுகிறார்.

அரிப்பும், கனமும் கபத்தினாலும், வீக்கமும், வலியும் வாதத்தினாலும், சிவப்பு வண்ணம் பித்தத்தினாலும், துர்நீர் இரத்தம் கெடுவதாலும் ஏற்படுவதால், இத்தகைய புண் ஏற்பட்டுள்ளவர்கள் பகல் தூக்கத்தை நிச்சயம் தவிர்க்க வேண்டும். படுக்கையிலிருந்து எழுவது, அமர்ந்துகொள்வது, நடப்பது, உரக்கப் பேசுவது போன்றவை மிகவும் கருத்துடனும், கவனத்துடனும் கடைப்பிடிக்க வேண்டி யவை.

புதிதாக அறுவடைசெய்த நெல், தானியங்கள், உளுந்து, எள்ளு, கொண்டைக்கடலை, கொள்ளு, அவரைக்காய், பச்சைக் கீரைகள், புளி, உப்பு, காரம், வெல்லம், மாப் பண்டங்கள், கருவாடு மற்றும் உலர்ந்த காய்கறிகள், ஆட்டு மாமிசம், செம்மறி ஆட்டு மாமிசம், நீர்வாழ் பிராணிகளின் மாமிசம், எண்ணெய் கொழுப்பு, குளிர்ந்த நீர், எள்ளுப்பொடி, பாயசம், தயிர், பால், மோர் ஆகியவை புண உள்ளவர்கள் தவிர்க்க வேண்டியவை.

காற்று, வெப்பம், புழுதி, புகை, பனி போன்றவை அதிகமுள்ள இடங்களில் இருப்பதை புண் உள்ளவர்கள் தவிர்த்தல் நலம்.

மேலும் அதிகமாய் உண்பது, செரிக்காத உணவுகளை உண்பது, முன் உண்ட உணவு செரிக்காதபோது மேலும் உண்பது, விருப்பமில்லாதவற்றை உண்பது, கேட்பது, பார்ப்பது போன்றவற்றையும், பொறாமை, கோபம், பயம், வருத்தம், கவலை, இரவில் கண்விழித்தல், நேரம் தவறிய உறக்கம் மற்றும் உணவு, நேரத்தில் உண்ணாதிருத்தல், வெகு நேரம் பேசுதல், உடற்பயிற்சி செய்தல், நடத்தல், குளிர் காற்று போன்றவற்றையும் தவிர்க்க வேண்டுமென்பது ஸூஸ்ருதரின் கூற்றாகும்.

கடுகு, வேப்பிலை, பசு நெய் மற்றும் இந்துப்பு ஆகியவற்றை போட்டு அதி லிருந்து வெளிப்படும் புகையைத் தினமும் இருவேளைகளில் பத்து நாட்களுக்கு புண் ஏற்பட்டுள்ள இடத்தில் காண்பித்து வர, அந்தப் பகுதியில் கிருமித் தொற்று ஏதும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

மேலும், அப்பகுதியில் துர்நீர் வெளிப்படுவது, துர்நாற்றம் போன்றவற்றையும் இந்தப் புகை சிகிச்சையின் மூலமாக தவிர்த்துக் கொள்ளலாம்.

பழைய அரிசியைச் சோறாக்கி, சிறிது நெய் தாளிதத்துடன் முயல், மாடு போன்ற மாமிச உணவு வகைகளுடன் சாப்பிடுவது புண்ணிலிருந்து விடுபடு வதற்கானதொரு நல்ல வழியாகும்.

சிறுகீரை, சிறுகுறிஞ்சான் கீரை, ஊசிப்பாலை, சக்ரவர்த்திகீரை, சிறுமுள்ளங்கி, சுண்டைக்காய், புடலங்காய், பாகற்காய் போன்றவை சாப்பிட நல்லது.

மாதுளம்பழம், நெல்லிக்காய், நெய்யில் வறுத்த இந்துப்பை பச்சைப்பயறுடன் சூப்பாக செய்து சாப்பிடுதல், ராகி மா, தினை மா, பயத்தம் பருப்பு, துவரம்பருப்பு வேக வைத்த நீர் போன்றவையும் சாப்பிடுவதற்கு உகந்தவை.

காய்ச்சிய நீரைக் குடிப்பது என்றுமே நல்லதாகும். எளிதில் செரிக்கக் கூடிய பசியைத் தூண்டிவிடக்கூடிய எவ்வகை உணவுகள் புண் ஆறச் செய்வதற்கு உதவிடக் கூடியவை.

ஆயுர்வேத சிகிச்சை முறைகளில் குடலைச் சுத்தப்படுத்தும் வாந்தி மற்றும் பேதிமுறைகள், பட்டினி இருத்தல், உடலிலுள்ள தேவையற்ற நீரை வெளியேற்றிடக்கூடிய உணவு முறைகள் இரத்தத்தை சுத்தப்படுத்தக் கூடிய அட்டைப்பூச்சியை வைத்து கடிக்கச் செய்யும் சிகிச்சை போன்றவை புண்ணை ஆற்றக் கூடிய சிகிச்சைகளாக கூறப்படுகின்றன.

மேலும், சரக்கொன்றைப்பட்டை, வேப்பம்பட்டை, ஆலம்பட்டை, அரசம்பட்டை, அத்தி, இத்தி, துளசி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கருங்காலிக்கட்டை, ஏழிலைப்பாலைப்பட்டை, புங்கம்பட்டை, வெட்பாலைப்பட்டை போன்றவற்றால் தயாரிக்கப்படும் கஷாய நீரைக் கொண்டு புண்ணைக் கழுவிவிடுதல், இவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் மூலிகைத் தைலங்களைப் புண் மீது பூசுதல் போன்றவை நல்ல குணம் தரக்கூடிய சிகிச்சை முறைகளாகும்.

# ஆரோக்கியமான வளமான சமூகத்தை உருவாக்கக்கூடியவர்கள் ஊடகவியலாளர்கள்

## தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் புகழாரம்

ஆரோக்கியமான மனதுடன் கூடிய சுகாதார வளமுள்ள சமூகமொன்றை உருவாக்க முடிந்த ஒரேயொரு நபர் ஊடகவியலாளரே என்ற அளவுக்கு ஊடகவியலாளர்கள் இன்று சமூகத்தில் மேலோங்கி காணப்படுகின்றனர் என தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்தார்.

"மாவட்ட அபிவிருத்தியில் பிரதேச ஊடகவியலாளர்களின் பங்கு" என்ற தலைப்பில் அரசாங்க தகவல் திணைக்களம் ஏற்பாடு செய்த இரத்தினபுரி மாவட்ட கருத்தரங்கு நேற்று முன்தினம் முற்பகல் 9.00 மணிக்கு இரத்தினபுரி லெல்லோபிட்டிய "சில்வரே" ஹோட்டலில் நடைபெற்றது..

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தேசியமட்ட பிரச்சினைகளை பற்றியும் பேசும் வலிமை இன்று உங்களுக்கு உண்டு. இன்று பெரும்பாலான பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளை அலங்கரிப்பது பிரதேச செய்திகள் தான்.

அதேநேரம் உங்களிடம் சில பொறுப்புக்களும் ஒப்படைக்கப் பட்டுள்ளன. இந்தப் பொறுப்புக்களை எவ்வாறு நிறைவேற்றுவது என்பது குறித்த நல்ல தெளிவும் ஆளுமையும் உங்களிடம் இருக்க வேண்டும்.

''பொறுப்பு'' என்பதை கைவிட்டு :சுதந்திரம்" என்ற பதத்தை மட்டுமே மேற்கத்தைய நாடுகள் எமக்குச் சொல்லித் தந்துள்ளன. இது குறித்து நீங்கள் மேலும் பரந்த அளவில் சிந்திக்க வேண்டும்.

ஊடகவியலாளர்கள் மதத் தலைவர்களாக செயற்பட வேண்டும் என்ற கருத்தும் இன்று நிலவுகிறது.

எனவே எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி எழுதுவதை விட எது சரி எது பிழை என்பதைச் சரியாக இனங்கண்டு தமது பேனாவை பயன்படுத்துவதே முக்கியமாகும். இதனை நிறைவேற்றுவதாயின் ஊடகவியலாளர்களிடம் ஆழ்ந்த பகுத்தறிவு இருக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தமது ஆளுமையை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# தொலைபேசி திருட்டில் இது ஒரு ரகம்

யாழ்.திக்கம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனின் தொலைபேசியை வீதியில் நின்றிருந்த மூவர் நேற்று முன்தினம் இரவு அபகரித்துச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

திக்கம் வீதியால் தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த மேற்படி இளைஞனை, வீதியில் மோட்டார் சைக்கிளில் நின்றிருந்த மூவர் வழிமறித்துள்ளனர்.

தங்கள் தொலைபேசிகளில் பண மீதி முடிவடைந்துள்ளதாகத் தெரிவித்து, இளைஞரின் தொலைபேசியில் இருந்து 5 ரூபாவை கடன் தருமாறும் கேட்டுள்ளனர்.

கடன் வழங்குவதற்காக இளைஞன் தொலைபேசியை எடுத்த போது, மேற்படி மூவரும் இளைஞரது தொலைபேசியைப் பறித்துக் கொண்டு ஓடியுள்ளனர்.

இதனையடுத்து, இளைஞன் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பொம்மைபோன்று செயற்படுகின்றார் தேர்தல்கள் ஆணையாளர்

## குற்றம்சாட்டுகிறார் சரத் பொன்சேகா



தேர்தல்கள் ஆணையாளர் பொம்மைப்போல் செயற்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஜன நாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஊவா மாகாண சபைத்தேர்தல்கள் தொடர்பில் தொடரும் வன்முறைகளை ஆணையாளர் கண்டுக்கொள்வது இல்லை.

பிபிலையில் பதிவு செய்யப்பட்ட எமது காரியாலயத்தில் இருந்து உறுப்பினர் வெளியேறும் போது அவர் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் எநத நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

வழமைப்போலவே பொம்மைப் போல் செயற்படும் தேர்தல்கள் ஆணையாளர் இது தொடர்பில் ஒன்றுமே தெரியாதது போல் இருக்கின்றார்.

தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற்றால் அது செய் வோம் இதுசெய்வோம் என வாயில் வந்த பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

எமது கட்சி எப்போதும் அகிம்சைவழியில் செயற்படும் ஒரு கட்சி. எனினும் எங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

நாட்டில் இடம்பெறும் மோசடிகளை தடுக்கவேண்டும். மக்களை ஏமாற்றி மோசடிகளை பணம் சம்பாதிக்கும் வேலை நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

சட்டவிரோத போதைப் பொருள், சட்டவிரோத சூது, பொலிஸார் மீது தாக்குதல் என்பனவே தற்போது ஒவ்வொரு நாளும் கேட்கும் செய்திகளாக உள்ளன.

சட்டத்தை தவறாக பயன்படுத்துகிறார்கள், குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கின்றனர். சாதாரண மக்களுக்கு சட்டம் உரிய வகையில் செயற்படுவதில்லை.

இந்த நிலையில், ஊவா மக்களுக்கு நீதியானதும் நேர்மையானதுமான சாதாரண தேர்தல் ஒன்றினை வழங்குமாறே நாம் கேட்கின்றோம் என்றார்.

# பக்கச்சார்பற்ற நடுநிலையான பௌத்த அமைப்பு உருவாக்கம்

இலங்கை தேசிய சங்க சபை என இந்த அமைப்பிற்கு பெயரிடப்பட்டுள்ளதாக கண்டி அஸ்கிரி பீட செயற்குழு உறுப்பினர் கலாநிதி மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பற்ற பௌத்த அமைப்பு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

நடுநிலையான கொள்கைகளை பின்பற்றக் கூடிய பௌத்த பிக்கு தலைமைத்துவமொன்று நாட்டுக்கு அவசியமானது என்ற காரணத்தினால் புதிதாக ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த மாநாயக்க தேரர்கள், பௌத்த பிக்குகள் மற்றும் பீடாதிபதிகள் இந்த அமைப்பில் முக்கிய பதவிகளில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

பௌத்த பிக்குகள் நடுநிலையான கொள்கைகளை போதிகக வேண்டும், பக்கச்சார்பாக செயற்படாது கூடாது ஆகியனவற்றை வலியுறுத்தும் வகையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

# 15 பவுண் நகைகளை திருடிய பெண்ணுக்கு விளக்கமறியல்

மருத்துவ தாதியாக நடித்து பெண் ஒருவரின் 15 பவுண் தங்க நகைகளை அபகரித்துச் சென்ற திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த பெண்ணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு, திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த பெண்ணை கடந்த சனிக்கிழமை பொலிஸார் கைது செய்தனர். தொடர்ந்து, மேற்படி பெண் நேற்று முன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இதன்போதே நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். மேற்படி பெண் அபகரித்த நகைகளை தனியார் அடகு நிலையமொன்றில் அடகு வைத்து, அந்தப் பணத்தை வட்டிக்கு கொடுத்தமை பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சிறுவர் கண் சத்திர சிகிச்சைப்பிரிவு வெகுவிரைவில் அமைக்கப்படும்

## யாழ்.வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் தகவல்



யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிலையத்திற்கு 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான நவீன லேசர் கருவி அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பரதிப் பணிப்பாளர் செஹ்ரீபவானந்த ராஜா தெரிவித்தார்.

மேற்படி கருவியை, அவுஸ்ரேலிய மருத்துவ உதவி நிதியம் மற்றும் அவுஸ்ரேலிய றோட்டறிக் கழகம் ஆகியன இணைந்து அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

இந்தக் கருவி யாழ் போதனா வைத்தியசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ளமையால், கொழும்பில் மேற்கொள்ளப்படும் லேசர் சத்திரசிகிச்சையை யாழில் மேற்கொள்ளக்கூடிய வசதிகள் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கருவி மூலமான சிகிச்சைகள் கடந்த வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தக் கருவி தொடர்பாக கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மு.மலரவன் கூறுகையில்,

மேற்படி கருவி கிடைக்கப் பெற்றதன் காரணமாக கொழும்பிறகு செல்லவேண்டிய தேவை, பணவிரயம் மற்றும் மொழிப் பிரச்சினை என்பன பெருமளவு தவிர்க்கப்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கருவி மூலமான சிகிச்சையானது வாரத்தின் 6 நாட்கள் மேற்கொள்ளப்படுகினறதுடன் இந்தச் சிகிச்சையை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த மக்களும் பெற்றுச் செல்கின்றனர்.

அத்துடன், சிறுவர்களுக்கான கண் சத்திரசிகிச்சை அலகும் வெகுவிரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார்.

# கண்தானம் செய்வதற்கு முன்வருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் கண்தானம் செய்வதற்கு முன்வரவேண்டும் எனவும், கண்தானம் மிகவும் உன்னதமான செயல் எனவும் யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் கலாநிதி மு.மலரவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்தானம் செய்யும் கலாசார நடைமுறை, யாழ்ப்பாணத்தில் இல்லாத காரணத்தால் கண்தானம் செய்வோரின் எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் குறைவடைந்துள்ளது.

இதில் மாற்றம் வந்து, அனைவரும் கண்தானம் செய்ய முன்வர வேண்டும்.

ஒருவர் கண்தானம் செய்தால் அதனைக் கொண்டு இருவருக்கு பார்வையளிக்க முடியும். இதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். மண்ணோடு மண்ணாக அல்லது தீயில் எரியும் உடலிலுள்ள கண்ணைத் தானம் செய்வதால் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படப்போவதில்லை.

கண்தானம் செய்வதன் அவசியம் மற்றும் அது தொடர்பான தேவை குறித்து, யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிலையம் சமூக சேவைகள் அமைப்புக்களுடன் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

1) வியாபார நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதற்கு ஆதாரமாக, அத்தாட்சியாக அமைவது
1) மூலப்பதிவேடு 3) பேரேடு
3) மூல ஆவணம் 4) பரீட்சை மீதி (.............)

2) மூலப்பதிவேடுகளானவை
1) எட்டு 2) ஆறு
3) ஒன்பது 4) நான்கு (.............)

3) மூல ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு முதன் முறையாகப் பதியப்படும் இடம்
1) துணையேடு 2) துணைப்பேரேடு
3) பேரேடு 4) பொதுத்தினசேரி (.............)

4) மூலப்பதிவேட்டில் முக்கியமான ஏடாகக் கருதப்படுவது
1) காசேடு 2) சில்லறைக் காசேடு
3) உட்திரும்பல் நாளேடு 4) விற்பனை நாளேடு (.............)

5) மூலப்பதிவேடாகக் கருத முடியாதது
1) விற்பனை நாளேடு 2) வெளித்திரும்பல் நாளேடு
3) விற்பனைப் பேரேடு 4) பொதுத்தினசரி (.............)

6) நாளேடுகள்... வகைப்படுத்தப்படும்
1) நான்கு 2) ஆறு
3) ஐந்து 4) மூன்று (.............)

7) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பணப் பெறுவனவுகளையும் பணக் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவுசெய்து கொள்வதற்காக பராமரித்துக் கொள்ளப்படும் ஏடு
1) ஒருநிரல் காசேடு 2) இருநிரல் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு 4) சில்லறைக் காசேடு (.............)

8) காசேடானது .... வகைப்படுத்தப்படும்
1) இரண்டு 2) ஐந்து
3) நான்கு 4) மூன்று (.............)

9) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) காசேடு 2) இருநிரல் காசேடு
3) சில்லறைக் காசேடு 4) ஒருநிரல் காசேடு (.............)

10) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசுதொடர்பான கொடுக்கல் வாங்கல்களுடன் வங்கி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களையும் மட்டும் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படுவது
1) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு 2) இருநிரல் காசேடு
3) காசேடு 4) நிரல்முறைச் சில்லறைக் காசேடு (.............)

11) வியாபார நிறுவனங்களில் இடம்பெறுகின்ற காசு, வங்கி, காசுக்கழிவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்வதற்காக பராமரிக்கப்படும் காசேடு
1) சில்லறைக் காசேடு 2) முற்பணமுறைச் சில்லறைக் காசேடு
3) மூன்றுநிரல் காசேடு 4) இருநிரல் காசேடு (.............)

12) உட்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
3) அடியிதழ் 4) விற்பனைப் பட்டியல் (.............)

13) வெளித்திரும்பல் நிகழ்விற்கான மூலஆவணம்
1) வரவுத்தாள் 2) செலவுத்தாள்
3) கொள்வனவுப் பட்டியல் 4) அடியிதழ் (.............)

14) விற்பனைப் பட்டியலை மூல ஆவணமாகக்கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை 2) காசோலை மூலம் விற்பனை
3) விற்பனை 4) கடன் விற்பனை

15) வங்கிக்கூற்றை மூலஆவணமாகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்
1) கடன்பட்டோன் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி செலுத்திய மின்சாரம்
3) வங்கி வசூலித்த பங்குலாபம்
4) மேற்கூறிய அனைத்தும் (.............)

16) சம்பளம் செலுத்திய இந் நிகழ்விற்கான மூலஆவணம்
1) சம்பளப் பட்டியல் 2) பற்றுச்சீட்டை
3) கைச்சாத்து 4) அடியிதழ் (.............)

17) காசோலை மூலம் கொடுப்பனவு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) பற்றுச்சிட்டை 2) அடியிதழ்
3) கைச்சாத்து 4) பட்டியல் (.............)

18) காசு பெறுவனவிற்கான மூலஆவணம்
1) கைச்சாத்து 2) பட்டியல்
3) பற்றுச்சிட்டை 4) செலவுத்தாள் (.............)

19) காசுக்கொடுப்பனவிற்கான மூல ஆவணம்
1) கைச்சாத்து 2) வரவுத்தாள்
3) பற்றுச்சிட்டை 4) அடியிதழ் (.............)

20) பிரயாணம் செலுத்தியது, சிறிய செலவுகள், அறவிடமுடியாக்கடன் இவற்றுக்கான சரியான மூலஆவணத் தொடர்
1) வழிச்செலவுத்துண்டு, சிறிய செலவுகள் க்ச்சாத்து, நாட்குறிப்புச் கச்சாத்து
2) பற்றுச்சிட்டை, கைச்சாத்து, விற்பனைப்பட்டியல்
3) வரவுத்தாள், செலவுத்தாள், அடியிதழ்
4) செலவுத்தாள், அடியிதழ், வரவுத்தாள் (.............)

21) வங்கியில் வைப்பு இன் நிகழ்விற்கான மூலஆவணம்
1) செலவுத்துண்டு 2) வரவுத்துண்டு
3) செலவுத்தாள் 4) வரவுத்தாள் (.............)

22) மூலப்பதிவேடாகவும் பேரேட்டுக் கணக்கில் ஒன்றாகவும் தொழிற்படும் துணையேடு
1) விற்பனை நாளேடு 2) கொள்வனவு நாளேடு
3) காசேடு 4) முறையான நாட்குறிப்பு(.............)

23) காசேட்டின் வங்கிநிரலில் வரவில் பதியப்படும் பொருத்தமான ஓர் கொடுக்கல் வாங்கல்
1) காசு விற்பனை 2) காசோலைமூலம் விற்பனை
3) கடன்பட்டோரிடம் பெற்ற காசோலை
4) வங்கி வசூலித்த பங்குலாபம் (.............)

24) காசேட்டில் எதிர்ப்பதிவு எனக் கூறப்படும் மிகமுக்கியமான கொடுக்கல் வாங்கல்
1) காசுவிற்பனை 2) வங்கியில் வைப்பு
3) வங்கி செலுத்திய காப்புறுதி 4) மின்சாரம் (.............)

25) காசேட்டில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்
1) கவிக்கு விற்பனை 2) கொடுக்க வேண்டிய வாடகை
3) சுகந்தனிடம் கொள்வனவு 4) மேற்கூறிய அனைத்தும்

26) காசேட்டில் பதிவு செய்துகொள்ளப்படும் கழிவு
1) காசுக்கழிவு 2) கணியக் கழிவு
3) வியாபாரக் கழிவு 4) பருவகாலக் கழிவு (.............)

27) காசேட்டின் ஞாபக நிரலாகக் கருதப்படும் நிரல்
1) வங்கி நிரல் 2) காசு நிரல்
3) கழிவு நிரல் 4) எவையுமல்ல (.............)

28) காசேட்டின் பெறுவனவுப் பக்க (வரவுப்பக்க) கழிவு நிரல்
1) காசுக்கழிவு 2) கொடுத்த கழிவு
3) பெற்றகழிவு 4) வியாபாரக் கழிவு (.............)

29) காசேட்டின் கொடுப்பனவுப்பக்க (செலவுப்பக்க) கழிவு நிரல்
1) பெற்றகழிவு 2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு 4) பருவகாலக்கழிவு (.............)

30) காசேட்டின் வரவுப்பக்க கழிவுத்தொகை
1) காசுக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கொடுத்த கழிவுக்கணக்கில் வரவில் பதியப்படும்
3) பெற்றகழிவுக்கணக்கில் செலவில் பதியப்படும்
4) வியாபாரக் கழிவுக்கணக்கில் பதியப்படும். (.............)

31) காசேட்டின் செலவுப் பக்க கழிவுத்தொகை
1) வியாபாரக்கழிவுக்கணக்கில் பதியப்படும்
2) கணியக்கழிவுக் கணக்கில் பதியப்படும்
3) பெற்றகழிவுக் கணக்கில் பதியப்படும்
4) கொடுத்தகழிவுக் கணக்கில் பதியப்படும் (.............)

32) காசேட்டின் செலவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லாதது
1) வங்கி செலுத்திய மின்சாரம் 2) வங்கிக்கட்டணம்
3) காப்புறுதி 4) காசோலைப் புத்தகக் கட்டணம் (.............)

33) காசேட்டின் வரவுப்பக்க வங்கி நிரலில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல்கள் அல்லாதது
1) கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு
2) வங்கி வசூலித்த பங்குலாபம்
3) வங்கியிலிட்ட பணம்
4) காசோலை மூலம் விற்பனை (.............)

34) நிறுவனக் கணக்குப் புத்தகங்களில் பதிவு இடப்படாத கழிவு
1) காசுக்கழிவு 2) கணியக்கழிவு
3) வியாபாரக்கழிவு 4) பருவகாலக்கழிவு (.............)

35) பட்டியல் விலையிலிருந்து குறைத்து வழங்கப்படும் கழிவு
1) வியாபாரக் கழிவு 2) கணியக்கழிவு
3) காசுக்கழிவு 4) பருவகாலக்கழிவு (.............)

36) 'நன்றி மீண்டும் வருக' எனும் வியாபாரப்புள்ளியில் 'ண்ண்க' எனும் குறி குறிக்கும் விலைப்பெறுமதி யாது?
1) ரூபா 580 2) ரூபா 250
3) ரூபா 620 4) ரூபா 520 (.............)

37) பட்டியல் விலையானது எது சேர்ந்த விலையாகக் காணப்படும்?
1) கொள்விலை + இலாபம்
2) விற்பனை விலை + இலாபம்
3) உற்பத்திச் செலவு + இலாபம்
4) விற்பனைவிலை + கொள்விலை (.............)

38) விற்பனை நாளேட்டில் ................ பதியப்படும்
1) காசு விற்பனை 2) நிலையான சொத்து கடன்விற்பனை
3) நாளாந்த கடன்விற்பனை 4) காசோலை மூலம் விற்பனை (.............)

39) விற்பனை நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ...... பதியப்படும்
1) விற்பனைக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்பட்டோர் கணக்கின் வரவுப்பக்கம்
3) விற்பனைக் கணக்கின் செலவுப்பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் செலவுப்பக்கம் (.............)

40) கொள்வனவு நாளேட்டில் ........... பதியப்படும்
1). காசோலை மூலம் கொள்வனவு
2) காசுக் கொள்வனவு
3) நிலையான சொத்து கடன்கொள்வனவு
4) மீள் விற்பனைக்கான பொருட்களின் கடன்கொள்வனவு (.............)

41) கொள்வனவு நாளேட்டில் .........இறுதி மொத்தத் தொகையானது
1) கொள்வனவுக் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
4) கொள்வனவுக் கணக்கின் செலவுப்பக்கம் (.............)

42) உட்திரும்பல் நாளேட்டில் ......... பதியப்படும்
1) காசுக்கு விற்ற தளபாடம் திரும்பிவரின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (.............)

43) உட்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது .... பதியப்படும்
1) உட்திரும்பல் கணக்கின் செலவுப் பக்கம்
2) உட்திரும்பல் கணக்கின் வரவுப் பக்கம்
3) கடன்பட்டோர் கணக்கின் செலவுப் பக்கம்
4) கடன்பட்டோர் கணக்கின் வரவுப் பக்கம் (.............)

44) வெளித்திரும்பல் நாளேட்டில் .......... பதியப்படும்
1) காசுக்கு கொள்வனவு செய்த தளபாடம் திருப்பியனுப்பின்
2) கடனுக்கு விற்ற சரக்கிருப்பு திரும்பிவரின்
3) காசுக்கு விற்பனை செய்த சரக்கிருப்பு திரும்பிவரின்
4) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கிருப்பு திருப்பியனுப்பின் (.............)

45) வெளித்திரும்பல் நாளேட்டின் இறுதி மொத்தத் தொகையானது ... பதியப்படும்
1) கடன்கொடுத்தோர் கணக்கின் வரவுப்பக்கம்
2) கடன்கொடுத்தோர் கணக்கின் செலவுப்பக்கம்
3) வெளித்திரும்பல் கணக்கின் வரவுப்பக்கம்
4) வெளித்திரும்பல் கணக்கின் செலவுப்பக்கம் (.............)

46) சில்லறைக்காசாளன் தலைமைக்காசாளனிடமிருந்து ஆரம்பத்தில் பெற்ற தொகை 9000 ரூபா சில்லறைக்காசாளன் குறிப்பிட்ட காலப்பகுதியில் செலவிடப்பட்ட தொகை 640 ரூபா எனின் கட்டுநிதி மீளளிப்பு இடம்பெறும் தொகை
1) 640 ரூபா 2) 8360 ரூபா
3) 9640 ரூபா 4) 9000 ரூபா (.............)

47) பொதுத் தினசேரியில் பதிவிடப்படும் கொடுக்கல் வாங்கல்
1) ஆரம்பப் பதிவு 2) செம்மையாக்கல்கள்
3) மூடும் பதிவு 4) மேற்கூறிய அனைத்தும் (.............)

48) பல இன பேரேட்டுக் கணக்குகளும் உள்ளடங்கிய ஓர் தொகுதி
1) மூலப்பதிவேடு 2) பேரேட்டுக் கணக்கு
3) பேரேடு 4) பொதுப்பேரேடு (.............)

49) பேரேட்டின் வகைகள்
1) துணைப் பேரேடு, பொதுப் பேரேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) சொத்துப் பேரேடு, பொறுப்பேரேடு (.............)

50) துணைப்பேரேட்டில் உள்ளடங்குபவை
1) விற்பனைப் பேரேடு, விற்பனை நாளேடு
2) விற்பனைப் பேரேடு, கொள்வனவுப் பேரேடு
3) வருமானப் பேரேடு, செலவினப் பேரேடு
4) உப பேரேடு,பொதுப் பேரேடு (.............)

51) விற்பனைப் பேரேட்டில் .......... பதியப்படும்
1) கடன்பட்டோர் பெயர்கள் மட்டும்
2) கடன்கொடுத்தோர் பெயர்கள் மட்டும்
3) விற்பனைக் கணக்குகள் மட்டும்
4) கொள்வனவுக் கணக்குகள் மட்டும் (.............)

52) மீள்விற்பனைக்கான கடன்கொள்வனவின் போது எழுகின்ற தனிநபர் கடன்கொடுத்தோர் பெயர்களை உள்ளடக்கும் பேரேடு
1) விற்பனைப் பேரேடு 2) விற்பனைக் கணக்கு
3) கொள்வனவுக் கணக்கு 4) கொள்வனவுப் பேரேடு (.............)

53) இரட்டைப் பதிவு விதி என்பது
1) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு ஒன்று இடல்வேண்டும்.
2) கொடுக்கல் வாங்கலுக்கு வரவுப் பதிவுக்கு சமமான செலவுப் பதிவு இடல் வேண்டும்.
3) கொடுக்கல் வாங்கலுக்கு இரண்டு பதிவுகள் இடல்வேண்டும்.
4) கொடுக்கல் வாங்கலுக்கு வரவில் அல்லது செலவில் இரண்டு பதிவு இடல் வேண்டும். (.............)

54) இரட்டைப்பதிவுத் தத்துவத்தின் தந்தை
1) இத்தாலி நாட்டைச் சேர்ந்த லூகா பெசியோலி
2) இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த லூகாபெசியோலி
3) இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜோய்
4) இஸ்ரேலியநாட்டைச் சேர்ந்த ஜோய் (.............)

55) இரட்டைப் பதிவுத் தத்துவம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
1) 1449 ஆம் ஆண்டு 2) 1049 ஆம் ஆண்டு
3) 1494 ஆம் ஆண்டு 4) 1944 ஆம் ஆண்டு (.............)

56) கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவினை பூரணப்படுத்துவதற்காக பராமரித்துக் கொள்ளப்படுவது
1) பேரேடு 2) பேரேட்டுக் கணக்கு
3) மூலப்பதிவேடு 4) பரீட்சைமீதி (.............)

57) பேரேட்டுக் கணக்கின் சரியான வகைப்படுத்தல்
1) வருமானக் கணக்கு, செலவீனக் கணக்கு
2) மெய்க் கணக்கு, பேரளவுக் கணக்கு
3) பெயருள் கணக்கு, பெயரளவுக் கணக்கு
4) ஆட்குறிக்கும் கணக்கு, ஆட்குறியாக் கணக்கு (.............)

58) பெயருள் (ஆட்குறிக்கும்) கணக்கின் பிரிவுகள்
1) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
2) வருமதியாளர் கணக்கு, வாடிக்கையாளர் கணக்கு
3) வழங்குனர் கணக்கு, விநியோகஸ்தர் கணக்கு
4) வருமதியாளர் கணக்கு, கடன்பட்டோர் கணக்கு (.............)

59) பெயரில் (ஆட்குறியாக்) கணக்கின் பிரிவுகள்
1) பேரளவுக் கணக்கு, பெயரளவுக் கணக்கு
2) பேரளவுக் கணக்கு, மெய்க் கணக்கு
3) கடன்பட்டோர் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
4) பெயருள் கணக்கு, மெய்க் கணக்கு (.............)

60) வருமானம், செலவீனம், நட்டம் என்பவற்றின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயரளவுக் கணக்கு 2) மெய்க்கணக்கு
3) பெயருள் கணக்கு 4) பெயரில் கணக்கு (.............)

61) சொத்துக்களின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு
1) பெயருள் கணக்கு 2) பேரளவுக் கணக்கு
3) பெயரளவுக் கணக்கு 4) மெய்க் கணக்கு (.............)

62) பெயரளவுக் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, விற்பனைக் கணக்கு
2) விற்பனைக் கணக்கு, விளம்பரக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு
3) மோட்டார்க் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) வங்கிக் கணக்கு, வங்கிக்கடன் கணக்கு, வங்கிக் கட்டணக்கணக்கு (.............)

63) மெய்க் கணக்கினை கொண்டுள்ள தொகுதி
1) மின்சாரக் கணக்கு, விளம்பரக் கணக்கு. காசுக் கணக்கு
2) பெற்றவாடகைக் கணக்கு, பெற்ற வட்டிக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) மின்சாரக் கட்டுப்பணக் கணக்கு, காசுக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
4) காசுக் கணக்கு, காப்புறுதிக் கணக்கு, மின்சாரக் கட்டணக் கணக்கு (.............)

64) வரவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) வாடகைக் கணக்கு, தளபாடக் கணக்கு, காசுக் கணக்கு
2) பெற்ற கழிவுக் கணக்கு, தளபாடக் கணக்கு, வங்கிக் கணக்கு
3) பெற்றவாடகைக் கணக்கு, மோட்டார் கணக்கு, விற்பனை கணக்கு
4) மின்சாரக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு (.............)

65) செலவு மீதியைக் கொண்டுள்ள கணக்குகள்
1) முதலீட்டுக் கணக்கு, காசுக் கணக்கு, வங்கிக் கணக்கு
2) பெற்றவட்டிக் கணக்கு, பங்குலாபக் கணக்கு, விற்பனைக் கணக்கு
3) தளபாடக் கணக்கு, சம்பளக் கணக்கு, வங்கிக் கணக்கு
4) மோட்டார் கணக்கு, மின்சாரக் கணக்கு, பங்குலாபக் கணக்கு (.............)

66) வருமானக் கணக்குகளின் தொகுதி
1) பெற்றவாடகைக் கணக்கு, பெறவேண்டிய வாடகைக் கணக்கு
2) மோட்டார் திருத்தச் செலவுக் கணக்கு, சில்லறை வருமானக் கணக்கு
3) சம்பளக் கணக்கு, பெற்றதரகுக் கணக்கு
4) பெற்றவட்டிக் கணக்கு, பெற்றவாடகைக் கணக்கு (.............)

67) செலவீனக் கணக்குகளின் தொகுதி
1) காப்புறுதிக் கட்டுப்பணக் கணக்கு, சம்பளக் கணக்கு
2) மின்சாரக் கணக்கு, மின்சார வைப்புக் கணக்கு
3) வங்கிக்கூலிக் கணக்கு, இறைவரிக் கணக்கு
4) காசாளன் பிணைப்பணக் கணக்கு, காசோலைப் புத்தகக் கணக்கு (.............)

68) சொத்துக் கணக்குகளின் தொகுதி
1) மோட்டார்ப் பெறுமானத் தேய்வுக் கணக்கு, தளபாடக் கணக்கு
2) வங்கிக்கடன் கணக்கு, வருமதி உண்டியல் கணக்கு
3) சென்மதி உண்டியல் கணக்கு, காசுக் கணக்கு
4) சேமிப்பு சான்றிதழ் கணக்கு, நன்மதிப்புக்கணக்கு (.............)

69) பொறுப்புக் கணக்குகளின் தொகுதி
1) அட்டுறு செலவுகள் கணக்கு, முற்பணமாகப் பெற்ற கடன்கணக்கு
2) பெறவேண்டிய வாடகைக் கணக்கு, பெற்றவாடகைக் கணக்கு
3) மின்சார வைப்புப்பணக் கணக்கு, மின்சாரக் கணக்கு
4) காசுக் கணக்கு, வங்கிக்கூலிக் கணக்கு (.............)

70) உடமைக் கணக்குகளின் தொகுதி
1) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பங்குலாபக் கணக்கு
2) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, முதலீட்டு வருமானக் கணக்கு
3) மூலதனக் கணக்கு, தேறியலாபக் கணக்கு, பற்றுக் கணக்கு
4) மூலதனக் கணக்கு, முதலீட்டுக் கணக்கு, பற்றுக் கணக்கு (.............)

71) மூல ஆவணம், மூலப்பதிவேடு, பேரேட்டுக் கணக்கு இவற்றின் தொடர்ச்சியாகத் தயாரிக்கப்படுவது
1) நாளேடு 2) தொங்கல் கணக்கு
3) நிதிக்கூற்றுக்கள் 4) பரீட்சைமீதி (.............)

72) பரீட்சைமீதியின் வரவுப்பக்கத்தில் ...... பதியப்படும்
1) சொத்து, பொறுப்பு 2) சொத்து செலவீனம்
3) வருமானம், செலவீனம் 4) சொத்து வருமானம் (.............)

73) பரீட்சை மீதியின் வரவுப்பக்கத்தில் ..... பதியப்படும்
1) சொத்து, வருமானம் 2) சொத்து, பொறுப்பு
3) பொறுப்பு, வருமானம் 4) பொறுப்பு, செலவீனம் (.............)

74) பரீட்சை மீதி சமப்படும் போது எடுக்கும் முடிவு
1) முழுவதும் பதிந்தது சரியானது
2) எந்தவித வழுவும் இல்லை
3) ஓரளவு இரட்டைப் பதிவு முறை பின்பற்றப்பட்டுள்ளது.
4) 100 வீதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிவு இடம்பெற்றுள்ளது (.............)





யாழ்.இந்திய துணைதூதரகம் வடமாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்திய தெய்வீக சுகானுபவம் III நிகழ்வில் ரீ.வி. ராம் பிரசாத்தின் கர்நாடக இசைக்கச்சேரி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் யாழ்.நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெற்றபோது. (படங்கள்-கே.நந்தகுமார், பார்த்தீபன்)

# தங்க நகைகள் திருட்டு

(வரணி)

வடவரணி ஜே/339 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட வீடு ஒன்றில் பட்டப் பகலில் துணிகரத் திருட்டுச் சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவத்தில் சுமார் 10 பவுண் தங்க நகைகளும் ஒரு இலட்சத்து இரண்டாயிரம் ரூபா ரொக்கப் பணமும் திருட்டுப் போயுள்ளன. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில் வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்ற சமயம் பார்த்து உட்புகுந்த திருடர்கள் வீட்டுக் கதவு வழியாக உள்நுழைந்து அறையினுள் இருந்த சூட்கேஸ் பெட்டியை கூரிய ஆயுதத்தால் உடைத்து அதனுள் இருந்த நகை பணம் என்பவற்றை எடுத்துச் சென் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இரவு வீட்டு உரிமையாளர் வந்து பார்த்த போதே விடயம் தெரிய வந்ததாக அவர் தெரிவித்தார்

(150)

# முரசின் இன்றைய பலன்

(27.08.2014 புதன்கிழமை)



விஜய வருஷம் ஆவணி மாதம் 11 ஆம் திகதி.
துதியை / அமிரிதம்
பூராட்சத்திரம் மு.ப.9/32 வரை பின் உத்தரம்.
இராகு காலம 12.05 - 01.35 வரை. சுபநேரம 04.35 - 06.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வியாபார விடயங்களில் நிறைய போட்டிகளை எதிர் கொண்டாலும் லாபம் ஏற்படும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடியுங்கள் |
| ரிஷபம் | உடன் பிறந்தோர் தேவையற்ற கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தினாலும் உடனுக்குடன் தீர்வு உண்டாகும். கருத்து முரண்பாடு சமரசத்தினால் நல்ல முடிவினை எட்டிவிடல் |
| மிதுனம் | கருணை மனுவினால் சாதகமான பதில் ஏற்படல், பொறுப்புக் கோராமல் பணம் மற்றும் பொருட்களைப் பிறருக்கு கொடுத்து பின் அவதிப்பட வேண்டாம். |
| கடகம் | சக ஊழியர்களுடன் சுமூகமான உறவினைப் பின் பற்றுக, திதி நிர்ணயம் பற்றி சோதிடர் மத்தியில் கருத்து வேறுபாடு |
| சிம்மம் | பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியாது பிறிதொரு தவணை கொடுத்தல், உங்களது அணுகுமுறையை மாற்றவர்களின் எதிர்பார்ப்புக் கேற்ப அமையுங்கள் |
| கன்னி | வியாபாரத்தில் வாடிக்கையாளர் கைகொடுத்துதவுதல், புதிய ஜீவன் ஏற்பட்ட அறிகுறி அறிந்து மகிழ்வு |
| துலாம் | ஏட்டிக்குப் போட்டியாக துணைவி வாக்குவாதத்தில் ஈடுபட்டதினால் குடும்ப கவி நிலை பாதிப்படைதல் |
| விருச்சிகம் | சந்தேகததினால் உறவினைத்துண்டித்து விடல், ஜாதகப் பொருத்தமின்மையினால் திருமண பந்தம் தள்ளிப்போதல் |
| தனுசு | குடும்பச் சொத்துப் பங்கீட்டினை பிள்ளைகளுக்கு எழுதி வைக்க சட்டத்தரணியை அழைத்தல், தொழில் இலாபம் பெற்று புதிய யுத்தியைக் கையாண்டதால் கைமேல் பலன் கிடைத்தல் |
| மகரம் | விவசாயிக நட்டநிலை தக்க வைத்தல், கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகைகளைப் பயன்படுத்தா திருப்பது நன்மை பயக்கும் |
| கும்பம் | உறவினர்களிடையே வாய்த்தர்க்கம், திறமைகளை அறிந்து கொண்டதினால் பதவி உயர்விற்கு சிபார்சு செய்தல் |
| மீனம் | உறவினர்கள் நம்பிக் கரம் நீட்டுவார்கள், பேதம் காரணமாக நிறைவேறிய திருமணம் பெற்றோர்களின் பாசத்தினால் அரவணைக்கப்படல் |

# அச்சுவேலி மேற்கு மக்களின் தேவைகள் பூர்த்தியாக்கப்படும்

## வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(அச்சுவேலி)

அச்சுவேலி மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தியில் நாம் கூடிய கவனம் செலுத்தி வருகிறோம் அந்தவகையில் இப்பிரதேச மக்களின் தேவைகளும் படிப்படியாக பூர்த்திசெய்யப்படும். என வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் இராமநாதன் ஐங்கரன் தெரிவித்தார்.

அச்சுவேலி மேற்கு மக்களுடைய வாழ்வாதாரம் மலசலகூடம வீதி அபிவிருத்தி தொடரபான கலந்துரையாடல் ஒன்று அச்சுவேலி மேற்கு மகளிர் விவகாரக் குழுத் தலைவி திருமதி.சுவர்ணன் சோபிகா தலைமையில் அச்சுவேலி மேற்கு, கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் கலந்து கொண்டார.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், எமது பெண்கள் அன்றாடம் வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு நடந்தும், துவிச்சக்கர வண்டிகளிலும் சென்று தமது ஒரு வேளை உணவிற்காக உழைத்து வருகின்றார்கள் அந்தவகையில் இதற்கு காரணமானவர்கள் பொய்த் தேசியம் பேசி குளிரூட்டப்பட்ட வாகனங்களில் வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள்.

பொய்த் தேசியம் பேசியவர்கள் உங்களுடைய வாழ்க்கைக்கோ, அல்லது உங்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கைக்கோ எதையும் பெற்றுத்தரமாட்டார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் எமது தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை வலுப்படுத்துவதன் ஊடாகவே உங்களுடைய வாழ்க்கை வளம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் வலிகாமம் கிழக்கு நிர்வாக குழுவின் உப செயலாளர் மாணிக்கம் சந்திரசேகரன், வலிகாமம் கிழக்கு நிர்வாக குழுவின் உறுப்பினர் திருமதி.மடுதேவன் குமாரவேணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 92 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா பல்வேறு போட்டிகளை நடாத்த ஏற்பாடு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் 92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவினை வெகு சிறப்பாக நடாத்துவதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அந்தவகையில்

சமாசம் ஆண்டு தோறும் இவ்விழாவை முன்னிட்டு தனது அங்கத்துவ நிறுவனங்களான சங்கங்கள், கொத்தணிகளின் உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளிர் குழுக்கள் ஆகியோரிடையே பல போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிப்பதை வழக்கமாக செயற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவ்விழாவிற்கான போட்டிகளாக துடுப்பாட்டப் போட்டி நடைபெற்ற நிலையில் ஏனைய போட்டிகளாக அங்கத்துவ சங்கங்களால் நடாத்தப்பட்டுவரும் பாலர பாடசாலைகளின் மாணவர்களிடையேயான திருக்குறள் மனனப் போட்டி, குழு நடனப் போட்டி என்பன எதிர் வரும் 4 ஆம் திகதி சமாசக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழுக்களுக்கான பேச்சு, கவிதை க்ட்டுரைப் போட்டிகள் அடுத்த மாத முற்பகுதியில் சமாசக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் 2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த அங்கத்தவர் தெரிவு சிறந்த பணியாளர் தெரிவு சிறந்த சங்கம் சிறந்த கொத்தணி தெரிவுகள் இடம்பெற்று தெரிவு செய்யப்படுவோர் பரிசில்கள். வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர.

அங்கத்தவர்கள், பணியாளர்களின் 2013 ஆம் ஆண்டில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரத்தில் 9 ஏ சித்தி பெற்றவர்கள், க.பொ.த உயர் தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர் கல்வியியற் கல்லூரிக்கு தெரிவானோர் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கும் மாணவர்கள் ஆகியோர் நிதி வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தனது 35 வருட சேவை நிறைவை முன்னிட்டு 75 ஆண்டு கால சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இலங்கை யுனிலீவர் நிறுவனத்துடன் (Pure it) குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகளை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் விற்பனை பிரதிநிதியாக ஒப்பந்தம் மேற்கொண் டுள்ளது. இதன் மூலம் சமாசம் தனது உறுப்புரிமை சங்கங்களின் அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு தவணை முறையிலோ அல்லது உடன் காசிற்கோ இக் (Pure it) கருவிகளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மேலும் 490 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமாசத்தின் பாம் கோப் சிற்றியில பொதுமக்கள் (Pure it) கருவிகளைக் கொள்வனவு செய்யமுடியும. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிரியாவின் விமானத்தளம் ஐ.எஸ்.ஐ.எஸ். வசமானது

## தாக்குதலில் 500 பேர் பலி



சிரியா விமானதளத்தை கைப்பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ் நடாத்திய தாக்குதலில் 500 இக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் பல்வேறு நகரங்களைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய நாடாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள், தற்போது சிரியாவின் இராணுவம் வசம் இருந்த விமான தளத்தை கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் சிரியாவின் தாப்கா (Tabqa) விமான தளத்தை கைப்பற்றுவது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே நடந்த தாக்குதலில், சுமார் 346 தீவிரவாதிகள் மற்றும் 170 இக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சிரியா இராணுவ வீரர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் தீவிரவாதிகள் நிலையாக இருக்கும் ராக்கா (Raqqa) நகரின் அருகே விமான தளத்தை கைப்பற்றிய வெற்றியை அவர்கள் கோலாகலமாக கொண்டாடியுள்ளனர்.

# இந்திய மக்களுக்கு வங்கிக் கணக்கு செயல் வடிவம் பெறும் மோடியின் திட்டம்



பிரதமர் மோடி டில்லியில் அனைவருக்கும் வங்கி கணக்கு தொடக்கும் திட்டத்தை நாளை வியாழக் கிழமை தொடங்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மோடி தனது சுதந்திரதின உரையில், நாட்டில் உள்ள அனைவருக்கும் வங்கிக் கணக்கு தொடங்குவதற்கான திட்டத்தை அறிவிததார்.

இத்திட்டத்தின் கீழ், வங்கிக் கணக்கு தொடங்குவதற்கு "ஆதார்" அட்டை இருந்தால், வேறு ஆவணங்கள் தேவை இல்லை.இந்த வங்கி கணக்கு தொடங்கிய பிறகு ஏ.டி.எம். அட்டை வழங்கப்படும். அதை வைத்து நாடு முழுவதும் உள்ள ஏ.டி.எம்.களில் பணம் எடுத்துக்கொள்ளலாம்.

மேலும், ஒரு இலட்சத்திற்கான விபத்து காப்பீடு, ஓய்வூதியம் போன்ற வசதிகளையும் மத்திய, மாநில அரசுகள் அளிக்கும் நிதி உதவிகளையும் வங்கிக் கணக்கு மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தத் திட்டம் குறித்து அனைத்து வங்கி அதிகாரிகளுக்கும் பிரதமர் நரேந்திர மோடி மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.அதில், நாடு முழுவதும் 7 கோடி குடும்பத்தினருக்கு நாம் வங்கி கணக்கு தொடங்க வேண்டும் எனவும், மேலும், இதை தேசிய முன்னுரிமை பணியாக கருத வேண்டும் என்றும் இது கடினமான பணியாக இருந்தாலும், இந்தச் சவாலை சந்திக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எபோலா எதிர்ப்பு மருந்தை உட்கொண்ட மூவர் பலி

எபோலோ வைரஸ் நோயை குணப்படுத்தும் எதிர்ப்பு மருந்தினை சோதனைக்காக உட்கொண்ட டாக்டர் உட்பட 3 மூன்று பேர் பலியாகினர்.

எபோலா எனும் வைரஸ் நோய் வடககு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, கினியா, சியராலியோன், நைஜிரீயா ஆகியா நாடுகளில் வேகமாகபரவியுள்ளது. இந்த வைரஸ் பாதிப்பிற்குள்ளான வர்களுக்கு மரணம் உறுதி என்பதால் இதுவரை 1,400 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இந்நிலையில் எபோலாவினை குணப்படுத்த ஜிமாப் எனும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

லைபீரியாவைச் சேர்ந்த டாக்டர் ஆபிரகாம் உள்ளிட்ட மூன்று ஆபிரிக்கர்களுக்கு இந்த மருந்து செலுத்தப்பட்டு சோதிக்கப்பட்டது. இதில் மருந்து சரியாக வேலை செய்யாததால் டாக்டர் இறந்து போனதாக லைபீரியா அமைச்சர் லிவீஸ் ப்ரௌன் தெரிவித்தார்.


# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL JAFFNA

The Chairman of the Regional Procurement Committee. Teaching Hospital. Jaffna. invite scaled bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schodule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Orthopaedic Clinic & Renovation of Toilet in Ward No: 06 | 500.00 | 23,000.00 | 91 | 1.12 | C8 |
| Renovation of Neurosurgical Ward, Aluminium Partition in the Operation Theatre and Aluminium Partition of Rooms in 1st & 2nd Floor JICA Building | 500.00 | 25,000.00 | 91 | 1.24 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training andDevelopment (ICTAD)

3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Intersested Bidders form Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for tha cash payment for the bid fee from 28.08.2014 until at 4.00 pm on 10.09.2014 during office hours. The payment shall be made to the Shroff, Teaching Hospital, Jaffna.

5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 11.09.2014. Late bides will rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman)**
Regional Procurement Committee, Tecaching Hospital, Jaffna. 27.08.2014



# PALMYRAH DEVELOPMENT BOARD INVITATION FOR BIDS

1. The Chairman of Palmyrah Development Board. National housing Secretariat, Kandy Road, Jaffna. invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2. Bidding will be conducted through limited Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the institute for Construction Training and Development (ICTAD)

4. Qualification requirements are indicated in Schedule 4 of the Bidding document. Additional detals are provided in the Schedule (Section 5).

5. Interested bidders may obtain further information from the Consultant Engineer, Tel : 077 7758689 and inspect the bidding documents free of charge **at the office of Swiss Labour Assistance - SAH, No 232, Thirunakar Road, Kilinochchi, from 9.00 hrs to 15.00 hrs during normal working days.**

6. A complete set of bidding Documents in English language may be purchased by bidders on submission of a writen application to **P.Seevarathinam, The Chairman, Palmyrah Development Board, National Housing Secretarial, Kandy Road, Jaffna & Palmyrah Development Board, District Office, Mankulam, Mullaitivu. from 27.08.2014 until on 10.09.2014 from 9.00 hrs. to 15.00 hrs.** upon payment of a non refundable fee of Rs.1,000.00 The method of payment will be in cash to the palmyrah Development Board.

7. Sealed bids shall be delivered or sent by registered post in duplicate to **The Chairman, Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna.** by **4.30 hrs on 10.09.2014** late bids will be rejected. Bids will be opened soon after colosing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| Bid ID. | Description of Works | Estimated cost (Million) | Construction Period | Required Grade | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
|---|---|---|---|---|---|---|
| vaReSD 0/01/ 2014 | Construction of Handicraft sale center | 1.8 | 4 Months | C 8 (Building) | 18.000.00 | 27.11.2014 |

9. Bids shall be valid for a period of a period 90 Days from the date of closing of Bids or any extended period.


10. All Bids shall be accompanied by a Bid Security which shall be:
- In the form included in Section 9 in the Bidding document.
- In favour of 'The Chairman, Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna.
- Issued by one of the agencies indicated in clause 16.0 of the Schedule.

11. Pre - bid meeting will be held at Palmyrah Development Board, National housing Secretariat, Kandy Road, Jaffna. at 14.30 hrs. On 11.09.2014.

**The Chairman,**
**Palmyrah Development Board,**
**National housing Secretariat,**
**Kandy Road, Jaffna. 25.08.2014**

(C/3788)

# அன்பின் வழிசென்று வாழ்வில் உயர ஆலயங்கள் வழிசமைக்க வேண்டும்



இன, மத வேறுபாடுகளை கடந்து இறைவழிபாடு இருக்க வேண்டுமெனவும், மக்களை ஒற்றுமைப்படுத்தி அன்பின் வழியது நின்று உயர்வடைய தேவ ஆலயங்கள் வழிசமைக்க வேண்டுமென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அனலைதீவில் புதுவாழ்வு மிசனரி சபையின் புதிய கட்டடத் திறப்பு விழா போதகர் சகாயராஜ் தலைமையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய போதகர் சகாயராஜ், இத்தேவாலயம் மக்கள் பணியிலும் இறை சிந்தனையிலும் தழைத்தோங்க வேண்டும். மக்கள் ஆன்மீக வழி நின்று மனநிம்மதியும் மகிழ்ச்சியான வாழ்வும் வாழ இத்தகைய தேவாலயங்கள் வழிசமைத்திருக்கின்றன என்றும் அத்தகைய தேவாலயங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதயனின் உதவிக்கரம் கிடைத்திருப்பது போற்றுதற்குரிய தென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை புதுவாழ்வு மிசனரி சபையின் புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் நாடாளுமன்ற உறுப்பினர் உதயனின் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன், உபதவிசாளர் அல்பேட், அனலைதீவு கடற்படை பொறுப்பதிகாரி தசநாயக்க, வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் புவி, ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மழை வேண்டி யாகம்



சைவ மகா சபையின் ஏற்பாட்டில் கடந்த ஒரு வார காலமாக நல்லூர் கோவில் வீதியில் உள்ள ராகவேந்திரர் பீடத்தில் ஜம்புகேஸ்வரரிடம் வறட்சி நீங்கி மழை வர வேண்டி நடைபெற்ற செந்தமிழிலான யாகம் 23.04.2014 சனிக்கிழமை நண்பகல் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நிறைவு பெற்றுள்ளது. மழை வேண்டி நடாத்தப்பட்ட யாகத்தில் அதிகளவான மக்கள் கலந்து கொண்டு பூசை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்கள். (63)

## நல்லூரில்...

நல்லூர் பகுதியில் உள்ள தற்காலிக வாகனத் தடையில் இருந்து சில மீற்றர் தூரத்தில் உள்ள ஒரு தனியார் ஊடகம் ஒன்றின் நிகழ்வு ஒன்றிற்கே இவா இவ்வாறு வந்துள்ளார்.

மேவின் சில்வா நல்லூருக்குள் வாகனத்தில் வந்தமை அண்மையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியமையும் குறிப்பிடத் தக்கது

## புலி...

கண்டறியப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வவுனியா புனர்வாழ்வு மையத்தில் 109 பேருக்கு தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

ஒரு வருடகால பயிற்சிகளை முன்னெடுக்கும் இவர்கள் அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் விடுவிக்கப்படுவார்கள்.

மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மீளாய்வு நடவடிக்கைகள் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று...

தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச்செயலர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் படை உயரதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

இவரின் விஜயத்தின் மூலம் இருநாடுகளுக்குமிடையிலான உறவு மேலும் வலுப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# டெங்கு தாக்கம் ஒருவர் அனுமதி

யாழ்.போதனாவைத்தியசாலையில் நேற்றும் ஒருவர் டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக் கப்பட்டுள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் திருநெல்வேலிப்பகுதியில் இருந்தே இந்த நோயாளி அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை நேற்று முன்தினம் நால்வர் இவ்வாறு யாழ். போதனாவைத்தியசாலையில் டெங்கு நோய்த்தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாதத்தில் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு இலக்காகி சிகிச் சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ளது. (பா)

# குடிநீர் விநியோகம் தயாராகிறது கருத்திட்டம்

கிராமிய மட்ட குடிதண்ணீர் மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பான கருத்திட்ட முன்மொழிவு யாழ். மாவட்டத்தை உள்ளடங்கிய வகையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

சமூக மயப்படுத்தப்பட்ட கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் விரைவில் மேற்கொள்ளவுள்ளார். எனவே யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி மன்றசெயலாளர்கள் ஆகியோரிடமிருந்து தரவுகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பொதுக்கிணறுகள், குழாய்க் கிணறு விபரங்கள் மற்றும் நீர்வழங்கும் பிரதான மூலங்கள் தொடர்பான விபரங்களை வழங்கப்பட்ட மாதிரியில் வழங்கி உதவுமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை கேட்டுள்ளது. (92)

# ஒலுமடுவில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் முழுவீச்சில்



வவுனியா வடக்கு ஒலுமடு கிராமசேவகர் பிரிவுக்கு 33.8 மில்லியன் ரூபா செலவில் 20 கிலோ மீற்றருக்கு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒலுமடு வேலடி ஓடைவழி பாலைமோட்டை தீவுக்காடு மாங்குளம் ஆகிய கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்துக்கு அமைவாக வேலைத்திட்டங்கள் மேற்கொண்டு வருவதையிட்டு .இக்கிராம அபிவிருத்திச்சங்கமும் இப் பிரதேச மக்களும் வடக்கின் வசந்த மின்சார சபைக்கு நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## தேசிய...

காலிமுகத்திடலில் பட்டங்களை பறக்கவிடுவதனால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று சுட்டிக்காட்டினார்.

மக்களின் மனங்களை கவர்வதற்கு வலுவான பொறிமுறை தேவை. இதன்மூலம் வழங்கப்படும் செய்தியினால் எண்ணங்களில் மாற்றங்களை கொண்டு வரமுடியும். இந்தநிலையில் அகில இலங்கை இந்து சம்மேளனத்துடன் தீவிரமான வலையமைப்பை ஏற்படுத்தியுள்ளதாக தேரர் கூறினார்.

இதன் முதல் கட்டமாக அகில இலங்கை இந்து சம்மேளனமும் பொதுபலசேனாவும் இணைந்து பௌத்த மற்றும் இந்து பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளன.

இதன்மூலம் இரண்டு தரப்பும் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்படவுள்ளதாக ஞானசார தேரர் குறிப்பிட்டார்.

இந்த இரண்டு அமைப்புக்களும் இணைந்து அமைக்கும் பிரிவுக்கு பௌத்த மற்றும் இந்து தர்ம ஆரக்கசன சபாவ (பௌத்த, இந்து தர்ம பாதுகாப்பு சபை) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிழையான எண்ணங்களை மாற்றும் முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாக பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் குறிப்பிட்டார்.

## அச்சுவேலி...

களுக்காக இந்திய அரசு சிறிய நன்கொடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 225மில்லியன் ரூபா நிதியுதவியையும் இலங்கை அரசு 50 மில்லியன் ரூபா நிதியுதவியையும் அளித்துள்ளன.

அச்சுவேலி கைத்தொழில்பேட்டை அபிவிருத்தி முன்னெடுப்பானது வட மாகாணத்தினை குறிப்பாக யாழ்.மாவட்டத்தினை ஒரு கைத்தொழில் மையமாக மாற்றி அதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய இணைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் வடமாகாணத்தில் துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்தக் கூடியதாக அமையுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

## புல்மோட்டையில்...

நேற்றுக்காலை 8.30 மணியளவில் அங்குவந்த நிலஅளவையாளர்கள் மக்களின் காணிகளுக்குள் நின்று பொலிஸ் பாதுகாப்புடன் அளவீடுகளை மேற்கொண்டனர்.

இதன்போது மூன்று கிராமங்களையும் சேர்ந்த சுமார் 600இற்கும் மேற்பட்ட மக்கள், வருகை தந்து நிலஅளவீட்டை உடனடியாக நிறுத்துமாறு கோரி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போதே பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதில் பொதுமக்களில் ஒருவர் காயமடைந்தார்.

அரிசிமலைப் பகுதியை அண்மித்துள்ள பொன்மலைக்குடா, வீரந்தீவு மற்றும் தேத்தாவடி தீவு ஆகிய கிராமங்களை ஊடறுக்கும் வகையிலேயே இந்த நில அளவை மேற்கொள்ளப்படவிருந்ததாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள் தெரிவித்தனர்.

அங்கு அமைக்கப்பட்டுள்ள விகாரையை அண்மித்ததாகவே இந்த மூன்று கிராமங்களும் இருக்கின்றன என்று தெரிவித்த மக்கள், இந்தக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 135 குடும்பங்க்ளைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டையில் தங்களுடைய உறவினர்கள் வீடுகளில் இன்னும் வாழ்ந்துவருவதாக சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் ஸ்தலத்துக்கு விரைந்த திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.யே.மார்க்ஸ் அங்கிருந்த திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபிக் உள்ளிட்ட அரசியல்வாதிகள் மற்றும் மக்களிடம் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து நிலஅளவீடும் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து இந்த நில அளவீடு தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.யே.மார்க்ஸ அறிவித்தார். அதனையடுத்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

அரிசிமலைப் பகுதியில் இதற்கு முன்னர் 5 தடவைகள் நில அளவீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் தொடரும் வறட்சி 64 கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக மக்களுக்கான குடிநீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளையும் சேர்ந்த 9167 குடும்பங்களைச் சேர்ந்த 37,790 பேருக்கு நாளொன்றுக்கு 3,78,750 லீற்றர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 4313 குடும்பங்களுக்கு 20,700 லீற்றர் குடிநீரும், கண்டாவளையில் 2333 குடும்பங்களுக்கு 64,500 லீற்றர் நீரும், பூநகரியில் 1466 குடும்பங்களுக்கு 53,250 லீற்றர் நீரும், பச்சிலைப்பள்ளியில் 1055 குடும்பங்களுக்கு 54,000 லீற்றர் நீரும் நாளொன்றுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பிரதேச செயலகம் 17 கிராமங்களுக்கும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 9 கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்கிறது.

கண்டாவளையில் பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலகம் 10 கிராமங்களுக்கும், கரைச்சி பிரதேச சபை 3 கிராமங்களுக்கும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒரு கிராமத்திற்கும் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்கிறது.

இதேவேளை பூநகரியில் பிரதேச சபை 10 கிராமங்களுக்கும், பிரதேச செயலகம் 2 கிராமத்திற்கும் குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்கிறது. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பிரதேச சபை 7 கிராமத்திற்கும் பிரதேச செயலகம் 5 கிராமத்திற்கும் குடிநீர் விநியோகத்தினை மேற்கொள்கிறது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலகங்களினால் 34 கிராமங்களுக்கும், பிரதேச சபைகள் மூலம் 20 கிராமங்களுக்கும்,நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் 10 கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை மக்களுக்கான முழுமையான நீர் விநியோகத்தினை மேற்கொள்வதற்கு 10 பவுசர்களும், 143 நீர்த்தாங்கிகளும் தேவை என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு கோரியுள்ளது.

அதனடிப்படையில் கரைச்சி பிரதேசத்திற்கு 3 பவுசர்களும், 57 நீர்த்தாங்கிகளும், கண்டாவளைக்கு 2 பவுசர்களும், 35 நீர்த்தாங்கிகளும், பூநகரிக்கு 3 பவுசர்களும், 40 நீர்த்தாங்கிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கு 2 பவுசர்களும், 11 நீர்த்தாங்கிகளும் தேவை என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் வழங்கலுக்கான நிதியினை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு வழங்கி நீர் விநியோகத்தினை மேற்கொண்டு வருகின்றனர். (29)


## ஜனாதிபதியின் ஆலோசகராக முன்னாள் கடற்படைத் தளபதி



இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஜயநாத் கொலம்பகே 2014 ஆகஸ்ட் 15 திகதி முதல் சமுத்திரம் மற்றும் கப்பல்துறை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக உள்ள இவர் கடந்த காலங்களில் கடற்படைக்கு ஆற்றிய சேவையைக் கருத்தில்கொண்டே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இப்பதவியை அவருக்கு வழங்கியுள்ளார்.

## 77 ஓட்டங்களால் இலங்கை பாகிஸ்தானை வீழ்த்தியது



(அம்பாந்தோட்டை)

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 77 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 310 ஓட்டங்களை குவித்தது. ஒரு கட்டத்தில் 62 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் என்ற நிலையிலிருந்த இலங்கை அணியை மஹேல - மத்தியூஸ் ஜோடி 122 ஓட்டங்களை இணைபாட்டமாக பெற்று வலுச் சேர்த்தது. இறுதிக்கட்டத்தில் திசார பெரேரா அதிரடி காட்ட இலங்கை அணியால் வலுவான ஓட்ட எண்ணிக்கையை பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் மஹேல 67, மத்தியூஸ் 93, திசார பெரேரா 65 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் வகாப் ரியாஸ் 4, ஹபீஸ் 3 விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

பதிலுக்கு 311 என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையில் இருந்த போதும், அதன் பின்னர் நிலை தடுமாறி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்து 43.5 ஓவரகளில் 233 ஓட்டங்களையே பெற்றது.

துடுப்பாட்டத்தில் சேஷாட் 56, ஹபீஸ் 62 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பெரேரா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். சகல துறைகளிலும் கலக்கிய திசார பெரேராவே ஆட்டநாயகனாக தெரிவானார். இவ்வெற்றி மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது 1:1 என்ற சம நிலையில் உள்ளது.

### - சுவிஸில் நண்பி கொலை -

# 14 வருடங்களின் பின்னர் கைதானார் இலங்கையர்

சுவிட்ஸர்லாந்தில் 14 வருடங்களுக்கு முன்னர் பெண் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் நியூஸிலாந்து ஒக்லேன்ட் பொலிஸார் இலங்கையர் ஒருவரை கைது செய்துள்ளதாக ரேடியோ நியூஸிலாந்து அறிவித்துள்ளது.

குறித்த இலங்கையர் சிறிய வர்த்தகம் ஒன்றை செய்துவருகிறார். இவர் 23 வயதான தனது முன்னாள் நண்பியை 2000 ஆம் ஆண்டு கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து போலி ஆவணங்களை காண்பித்து குறித்த இலங்கையர் நியூஸிலாந்துக்குள் பிரவேசித்துள்ளார்.

இந்தநிலையில் 2014 ஆம் ஆண்டு அவருக்கு நியூஸிலாந்தில் பிரஜாவுரிமை கிடைத்தது.

இந்தநிலையில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்ட இலங்கையரிடம் இருந்து பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பான வெளியுறவு அமைச்சின் கடிதமும் கைப்பற்றப்பட்டது.

எனினும் அவரை சுவிட்ஸர்லாந்துக்கு நாடு கடத்துவதற்கு இரண்டு நாடுகளுக்கும் இடையில் நாடு கடத்தல் ஏற்பாடுகள் எதுவும் நடைமுறையில் இல்லை என்று கூறப்படுகிறது.

## ஆஸி. செல்ல முயற்சித்த ஆறு இலங்கையர்கள் கைது

அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முய்ன்ற நான்கு பேர் உட்பட 6 இலங்கையரை இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆந்திராவின் ஒன்கோல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சண்முகலிங்கம் (வயது - 47), பர்னபாஸ் (வயது - 51), இவரின் மனைவியான அஞ்சலி (வயது-46), பாஸ்கர் (வயது - 45) ஆகியோரே இவ்வாறு அவுஸ்ரேலியாவுக்கு செல்ல முயன்ற வேளை கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை சென்னையில் இருந்து ஆந்திராவுக்கு படகு மூலம் அழைத்துச் சென்ற மீனவரையும், அத்துடன் இவர்களிடம் 5 இலட்சம் இந்திய ரூபாவை (இலங்கை மதிப்பில் சுமார் 12 இலட்சம் ரூபா) பெற்று சரக்கு கப்பல் மூலம் அவுஸ்ரேலியாவுக்கு அனுப்ப முயன்ற தரகரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இலங்கையிலிருந்து விமானம் மூலம் சென்னைக்கு சென்றுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படவேண்டும்

### தவறின் பொது வேட்பாளர்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்காவிட்டால் பொதுவேட்பாளர் ஒருவரை மக்களின் ஆதரவுடன் நிறுத்தப் போவதாக நீதியான சமூகத்திற்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் எச்சரித்துள்ளார்.

கண்டியில் பிரதம மகாநாயக்கர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களுக்கு இதனை தெரிவித்துள்ள அவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதே தனது இயக்கத்தின் முக்கிய இலக்கு என குறிப்பிட்டுள்ளார். பிரதம மகாநாயக்கர்களும் அதனை ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியே முன்னர் இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் அதனை நிறைவேற்றாவிட்டால் அதற்காக பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்தை பாதுகாக்க நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு கூறும் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும், அரச நிறுவகங்களின் அதிகாரம் சரியான கரங்களில் உள்ளதை உறுதிப்படுத்த 17 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நூறு மில். பெறுமதியான மதுபானம், சிகரெட் பறிமுதல்

(கொழும்பு)

ஒரு தொகுதி வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் சிகரெட் வகைகள் பொரள்ளை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் பெறுமதி சுமார் 100 மில்லியன் ரூபா என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் ,அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.



பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



### நடராசா அன்னலட்சுமி

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும், காவோலையம்புலம், கொற்றாவத்தை, அல்வாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அன்னலட்சுமி 26.08.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமன் நடராசா (ராசு) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பூரணம் ஆகியோரின் அன்பு மகளும், சித்திரவேலாயுதம், ஆனந்தராசா, ஆனந்தசெல்வம் ஆகியோரின் அன்பு சகோதரியும், இராஜேஸ்வரன், இராமதாஸ் (கிளி. கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ரதீஸ்வரன் (கட்டார்), இராமலக்சுமி, இரவீந்திரன் (இ.போ.ச) ஆகியோரின் அன்புத் தாயாரும், யமுனா, மைதிலி (வயாவிளான்), சைலயா, யோகராசா (லிகிதர் - ப.தெ.வ.கூ.ச. தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கெங்காதேவி, சாந்தி, வாசுகி, பவளம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாவும் இன்று (27.08.2014) புதன்கிழமை 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நடராசபதி
காவோலையம்புலம்,
அல்வாய் மேற்கு, கொற்றாவத்தை. (இ)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.